

தாழை.இரா.உதயநேசன்

கவிஞரும் இனிய நண்பரும் தமிழ் காக்கும் நற்மிழ்க் காவலருமான தாழை. இரா. உதயநேசன் அய்யா அவர்களின் இந் நூல் தமிழர் நெஞ்சங்களில் வற்றாத ஊற்றெனத் தமிழ் சுரக்கும்.

படிப்போம் ! பயன் பெறுவோம்

சோ. பிலிப் சுதாகர்,
ஆதரவற்ற தொழிலாளர் நலப் பணி,
தமிழ்நாடு ஆதவன் உலகச் செம்மொழி தமிழ்ச் சங்கம்,
திண்டுக்கல்

அமெரிக்க பல்கலை வேந்தரும் உலக முத்தமிழ் கூட்டமைப்பின் தலைவருமான அன்பர் முனைவர் தாழை இரா.உதயநேசன் அவர்களின் " எண்ணமே ஏற்றம் தரும் " என்கிற கவிதை நூல் கவிதை இலக்கிய உலகுக்கு ஓர் அற்புத நூல்.

வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு

கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்
நிறுவுநர் உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்
தன்முனைக் கவிதைகள் குழுமம்
சென்னை

9 788119 372768

எண்ணமே ஏற்றம் தரும்

- தாழை.இரா.உதயநேசன்



எண்ணமே ஏற்றம் தரும்

தாழை.இரா.உதயநேசன்

எண்ணமே ஏற்றம் தரும்



- தாழை.இரா.உதயநேசன்

நூல் தலைப்பு

எண்ணமே ஏற்றம் தரும்

நூல் ஆசிரியர்

தாழை.இரா.உதயநேசன்

நூல் வகை

தெம்மாங்குக் கவிதைகள்

முதற்பதிப்பு

2023

நூல் அளவு

1/8 டெம்மி

பக்கங்கள்

106

உரிமை

ஆசிரியருக்கு

நூல் வடிவமைப்பு

ம.சேவியர்

விலை

120

அச்சு

டுடே கிராபிக்ஸ்,சென்னை

Book Title

Ennamey Yetram Tharum(poem)

Author

Thazhai. R. Udhayanesan

Book

Melody poetry

First Edition

2023

Size

Demy

Pages

106

Copyrights

Author

Book Layout

M.Xavier

Price

$8

Print

Today Graphics,Chennai

ISBN NO : 978-81-19372-76-8

வெளியீடு / புத்தகம் கிடைக்குமிடம்

கலை உதயம் பதிப்பகம்
எண்:10, முதல் தெரு, ஸ்ரீராமபுரம்,
ஆம்பூர்-635802.
திருப்பத்தூர் மாவட்டம்.தமிழ்நாடு
தொடர்புக்கு: 95978 64183
E.Mail : kalaiudhayampublisher@gmail.com

Publisher

6643,Locust Grove Dr.Indianapolis,
Indiana - 46237,USA
Cell 317 4082356
rajiudhay@gmail.com

வாழ்த்துரை

அமெரிக்க பல்கலை வேந்தரும் உலக முத்தமிழ் கூட்டமைப்பின் தலைவருமான அன்பர் முனைவர் தாழை இரா.உதயநேசன் அவர்களின் “எண்ணமே ஏற்றம் தரும் ” என்கிற கவிதை நூல் கவிதை இலக்கிய உலகுக்கு ஓர் அற்புத நூல்.

வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு

என்கிற குறள் நெறிக்கு ஏற்ப இந்த நூலின் தலைப்பு மட்டுமல்ல இடம்பெற்றுள்ள அனைத்துக் கவிதைகளிலும் மனித உளவியல், வாழ்வியல், நெறிசார்ந்த வாழ்வினை உணர்த்தும் கருத்துகள் அமைந்த வரிகள் இடம்பெற்றுள்ளன.

இதயம் அனைத்தும் இறுக்கம் தளர்த்து
உதயம் ஆகட்டும் உள்ளன்பு பெருகட்டும்
அறமும் கனிவும் அகத்தினில் வளர்ந்து
பிறக்கட்டும் இங்கே பாசத்தின் ஊற்று

என உள்ளன்பின் இருப்பிடத்தை நமக்கு அடையாளம் காட்டுகிறார்.

இவரது இன்னொரு கவிதையில் உள்ள வரிகள் என்னை ஆட்கொண்டன என்றால் மிகையில்லை. யதார்த்த வரிகள்தான் ஆனால் வாழ்வியலுக்கு வடம்பிடிக்கும் உளவியல் வரிகள் என்றே சொல்லலாம்....

அறநெறி காத்து அறிவை வளர்த்து
அன்பெனும் அடித்தளம் ஆழமாய்ப் பதித்து
குறைகள் மறந்து நிறைகள் பேசி
வாழ்வில் வசந்தம் வீசச் செய்குவோம்.

இந்தக் கவிதையில் தலைப்பையே " எண்ணமே ஏற்றம் தரும்" என புத்தகத்துக்கு சூட்டியுள்ளார். ஆம்..ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய, படிக்கவேண்டிய, பின்பற்றக்கூடிய நூல். சிறப்பான இந்த கவிதை நூலினை படைத்துள்ள ஐயாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா.ந.கல்யாணசுந்தரம்
நிறுவுநர்
உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்
தன்முனைக் கவிதைகள் குழுமம்
சென்னை

அணிந்துரை

பிரபஞ்சத்தின் பிரமாண்ட இரகசியம்

வடிவமும், நிறமும், மணமும், இயல்பும் அற்றவைகளாகத்தான் எண்ணங்களிருக்கின்றன. சீரிய அறிவின் எல்லையில் ஒன்றின் பிரதிபலிப்பே எண்ணமாகிறது. கற்பனை, சிந்தனை, நினைவு என்பவையெலாம் சிற்சில மாற்றங்களுடனான நடத்தைகளின், நிகழ்ந்தவைகளின், எதிர்பார்த்தலின் வெளிப்பாடுகளாக எண்ணங்களிருக்கின்றன. அவை ஒவ்வொறு உயிர்களிலும், ஒவ்வொன்றாயிருக்கின்றன. அவை பிரபஞ்சத்தின் பிரமாண்ட இரகசியமாயிருக்கிறது. காலந்தோறும் அறிவுசார் கோட்பாடுகளை மனிதன், காலத்தின் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு, புதிது புதிதாய் தமது எண்ணமாக அவற்றினை வெளிக்கொணர்கின்றான்.

உலகின் அனைத்திற்கும் அடித்தளமான எண்ணவோட்டங்கள் குறித்த தலைப்போடு,

தமிழ்மாமணி. தாழை. இரா.உதயநேசன் அவர்களின் “எண்ணமே ஏற்றம் தரும்” எனும் கவிதைநூல் தற்காலச் சிந்தனைகளின் வடிகாலாகும். அது, மானிடசமூகஒழுங்கமைப்பு குறித்தான அறிவுச்சுரங்கமாக, அழகுப் பெட்டமாக வெளிவந்திருக்கிறது.

எளிமையும். ஆழமும் இணைந்த பொக்கிசமாக இந்நூலிலுள்ள கவிதைகளைக் கூறலாம். வடிவமும். வெளிப்பாடும் அதன்வழி விரியும் பெருவெளிச் சிந்தனைப்போக்கும் எதிர்காலச் சமூகத்திற்கான அருட்கொடை என்றே கூறலாம்.

உலக மாமேதைகளான, சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில், மொசார்ட், காரல்மார்க்ஸ், சர்ச்சில், பிளேட்டோ, ரூஸோ, அலெக்சாண்டர் ருமாஸ் வரிசையில் இந்தியாவிலும், தமிழகத்திலும் பலநூறு மேதைகள் தோன்றித் தமது எண்ணவோட்டங்களைச் சரிப்படுத்தி, உலகம் மேன்மையடைய தத்துவங்களாகவும், தீர்க்கதரிசனஉரைகளாகவும், பொன் மொழிகளாகவும் வெளியிட்டனர். தமிழில், அறஇலக்கியங்கள் எனும் மாபெரும் பகுப்பில் முழுமையடைந்து கிடக்கிறது அதன் அடர்த்தி.

கண்டுபிடிக்க முடியாத அற்புதமான தீர்வுகளைக் கண்டுபிடித்தும், தீர்க்க முடியாத புலப்பாடுகளைப் பல்வேறு அனுபவக் கட்டங்களின் மூலம் தீர்வைக்கண்டும் உலகம் சமநிலைப்படுவதற்கு எண்ணங்களே காரணமாகின்றன. இலக்கியம் என்பது எண்ணங்களின் வடிகாலாகும். “இலக்கிய உருவாக்கம் சமூக உருவாக்கத்துக்கு

இன்றியமையாதது, அதாவது தனக்கென இலக்கியம் இல்லாத ஒரு சமூகம் உண்மையிலேயே நன்கு ஒழுங்கமைப்பட்ட சமூகமாகாது” என்கின்றார் கார்த்திகேசு சிவத்தம்பி.

பழமைக்கும், புதுமைக்கும் இடையில் ஓடும் உணர்வுகளும் அதன் சாயல்களும் தான் வேறுபடுகின்றன. ஒவ்வொரு இடமும், காலமும், சிற்சில வேறுபாடுகளைத் தாங்கியே இருக்கின்றன. மனிதர்களும் அவ்வாறே இருக்கின்றனர். சிலர் மாறுபாடுகளை உணர்கின்றனர். அதன் இழந்துபோன உணர்வுகளுக்காக ஏங்குகின்றனர். பரிதவிக்கின்றனர். தவிப்புடன் அலை மோதுகின்றனர். இது போன்ற ஒருணர்வை தாழை. உதயநேசன் தம் கவிதையில் எழுதும்பொழுது, நமக்கு அதன் வலி சுள்ளெனக் குத்தத்தான் செய்கின்றன. அவ்வாறான பாடல்களாக,

“பழைய சோறும் பச்சை மிளகாயும்
பாசம் நிறைந்த ஓலைக் குடிசையும்
சிந்தையைச் சிறைபிடித்த கணினி உலகில்
ஏக்கம் தருமோ-மீண்டும் கிடைக்குமோ!”

“உணர்வைக் கலைக்கும் கற்பனைப் பறவைகள்
உணவு தேடாத உள்மன அலைகள்
மாய வீதியில் பறக்கும் சிறகுகள்
தேயாது இணைந்து நடக்கும் நினைவுகள்”

இவற்றைக் கூறலாம். உணர்வின் உச்சமான இடங்களை மனிதர்கள் தொட்டுத்தடவி அதன் இலயிப்பில் மெய்மறந்து போவதில்லை. பெரும்பாலும்

நிகழ்வின் ஓட்டத்தில், அடுத்ததை நினைத்து, நினைத்து வாடும் காலமிது. ஆனால், பாசம், அன்பு, பிணைப்பு, அரவணைப்பு, வழிநடத்தல், உருவாக்கல், போன்ற ஒவ்வொன்றிலும் அப்பா எனும் மாபெரும் சிற்பம் இருக்கின்றது. இதனை உணர்ந்து, விடுபட்ட பொழுதில், இல்லாது போன இழப்பின் பெருவலியைத் தம் பாடலில் தாழையார் விளக்குகிறார். அப்படியே அந்த உணர்வுகள் நமக்குள் மடைமாற்றமாகின்றன. 'அப்பா' குறித்த பாடலாக,

"அப்பழுக் கின்றி அனைத்தும் தாங்கி
அப்பா என்றதும் அகமகிழ்ந்து நிற்பாய்
எப்பிறப்பு இப்புவியில் எப்பொழுது எய்தினாறும்
அப்பிறப்பை உன்பிறப்பில் அடைந்திடவே ஏங்குகின்றேன்."

இதனைக் கூறலாம்.

மகாகவியைச் சிம்மாசனம் போட்டுத் தம்பாடல்களில் அமரவைத்து அழகுபார்க்கும், ஆராதிக்கும் பாரதியின் கவிதைகளில் தம் மனதைத் தொலைத்ததாகக் கூறும் தாழையார் பாரதியின் எண்ணங்கள் ஈடேறும் எனத் தமது பாடல்களில் எழுதுகிறார். முண்டாசுக் கவிஞனின் எண்ணங்களே ஏற்றம் தரும் என அதன் பாதையிலேயே தமது எண்ணங்களை இன்னும் ஆழமாகத் தமிழ் நெஞ்சங்களில் பதிவிறக்கச் செய்கிறார்.

"சாதிகள் இல்லையென சாத்திரம் அறுத்தவன்
வீதிகள் தோறும் விளக்கொளி தந்தவன்
சோதிகள் வெளிச்சத்தில் சோம்பல் தகர்த்திட
சேதிகள் சொன்ன சிம்மாசனம்"

இப்பாடலில் நேரடியாக ஒரு பொருளும், மறைபொருளாகப் பலபொருளும் நமக்குப் புலப்படுகின்றன. ‘வீதிகள் தோறும் விளக்கொளி தந்தவன் என்கின்றார். வெறும் இருள் போக்கும் ஒளி மட்டுமல்ல. இங்கு பொருள் வீதியிலுள்ள ஒவ்வொரு வீடுகளிலுமுள்ள ஒவ்வொரு இல்லத்தார்களையும், அதாவது தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, தங்கை, அக்கா, தம்பி என அனைவரும் சிந்தனையால் எண்ணத்தால் நல்லவை உணர்ந்து இருளற்ற வாழ்க்கை வாழ அனைத்துவகையிலும் ஒளிதந்தவன் பாரதி என்கின்றார் தாழை.உதயநேசன். ஒரு வரிதான் இன்னும் ஓராயிரம் பொருள் தரும் அது. வார்த்தைகள் ஏதும் வெற்றாயிராது ஒளிக்கீற்றாய் அனைவரிடத்திலும் பாயும் இலாபகத்தைப் பெற்றுள்ளன கவிஞரின் அனைத்துக் கவிதைகளும்.

மானுடம் தவறு செய்யும் பொழுது, தற்காலப் புரட்சிக்கவியாக, முண்டாசுக் கட்டிக் கொண்டு கிளம்புகிறார் ஆசிரியர். பெண்கள் காலங்காலமாய் அடக்கப்பட்டு, முடக்கப்பட்டு வெளிவர விடாமல் தடுக்கும் ஆணாதிக்க மிக்க பெருக் கொடுங்கோலர்களைப் பார்த்து,

“நிலமும் நீரும் மண்ணும் மொழியும்
பெண்ணென வகுத்துப் பெருமை பேசி
பெண்மீது வன்மம் பெரிதாய் புகுத்தி
பெண்ணியம் பேசுதல் புவிதனில் தகுமோ!”

என முகத்திரைக் கிழித்து உண்மை முகம் மாற்றி, சமூக மேம்பாட்டினை உணர்ச்சிகளெனத் தம் எண்ணத்தை இப்பாடலில் கூறியதைப் போல் இன்னும் நிறையப் பாடல்கள் மூலம் பதிவு செய்கின்றார்.

“ஆக்கம் ஊக்கம் அகிலத்தில் விதை
ஆக்கும் சக்தி அன்றாடம் நினை
உழைப்பவர் நலநன உலகிற்கு உரை
மானுட மகிழ்வே மண்ணில் இறை”

மகிழ்வை நோக்கித்தான் வாழ்கின்றோம். அதைப் பெறவே நிகழ்வுகள் நடக்கின்றன. அதுதான் உலகின் மாபெரும் ஒரேயொரு இறை. மகிழ்வே இறைவன் என்பதை உணர்ந்தால், நீயும் மகிழ்ச்சியாகயிருப்பாய் பிறரையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பாய். அவ்வாறு உலகம் இயங்கியதென்றால், துன்பமும், சோகமும் இவ்வுலகில் ஏது?

எண்ணங்கள் முழுவதும் எதிர்காலச் சிந்தனையாக அமைந்து, கட்டுப்பாடான ஒரு எல்லையை நோக்கி கவிஞர் தாழையாரின் எண்ணங்கள் எப்போதும் சென்று கொண்டேயிருக்கின்றன. ஒருவன் தீயவனாக மாறுவதற்குக் காரணம், அவனின் தேவைக்கதிகமான தேடலும் நிகழ்வுகளுமேயாகும். அதனை மாற்றிச் சமூகம் மேலிட வேண்டுமெனின் தாழையாரின் கருத்துகள் இளம் மனதில் ஆழமாய் பதிய வேண்டும்.

ஒருவரின் சிந்தனை, சமூகத்தை எவ்வாறு மாற்றும் என்பதை ஹிசாம் சரபியின் (Hisham Sharabi) ஆய்வு நூல்களில் “Neopatriarchy A theory of distoried change in Arab society” எனும் நூல் குறிப்பிடத்தகுந்தது. இந்நூல் வெளிவந்த தருணத்தில் இந்த நூல் மத்தியக்கிழக்கு அரபுலகிலும், மேற்கத்திய அறிவுத்துறை வட்டாரங்களிலும் மிகுந்த தாக்கத்தை ஏற்பத்தியது”

எனும் மேற்கோள் காட்டும் செய்தியானது இங்கு எண்ணத்தக்கதாகும்.

மேற்காணும் நூல் அரபுலகம் முழுவதும் மாறுவதற்குக் காரணமாக இருந்தது என்றால், நூலாசிரியரின் எண்ணங்கள் அத்தகை சிறப்புக்குரியதாகும். அந்தக் கருத்துலக மாற்றத்தைத் தாழையாரின் இந்நூலும் இச்சமூகத்திற்குச் செய்யும் என்பது திண்ணம்.

எண்ணங்கள் ஏற்றம் பெறட்டும். கவிஞர் தாழையாரின் சிந்தனைகளால், வழிகாட்டலால், கற்வனைத்திறத்தால் உலகம் உய்வடையட்டும்.

கவிஞர் இன்னும் பலநூறு நூல்களைப் படைத்து இப்பிரபஞ்சத்தை ஞானவொளி வெள்ளத்தில் ஆழ்த்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

முனைவர் **செ.சு.நா.சந்திரசேகரன்**
(பாரதிசந்திரன்)
தமிழ்ப்பேராசிரியர்,
வேல்டெக் ரங்கா சங்கு கலைக்கல்லூரி, ஆவடி

வாழ்த்துரை

தாழை இரா. உதயநேசன் அவர்களின் ‘எண்ணமே ஏற்றம் தரும்‘ என்னும் நூலின் அட்டைப்படமே அசத்துகிறது. ஏற்றம் தராதது மாற்றம் தராது. ஏமாற்றமே தரும். பக்கம் தோறும் நூலின் கவிதைப் பயணம் படிப்போரையும் உடன் பயணிக்க ஊக்கப்படுத்துகிறது.

எண்ணங்களின் ஏற்றம் அறிவார்ந்த துலாக்கோலில் அனைத்தையும் எடைபோட்டுப் பார்ப்பது. நாமும் நாம் வாழும் சமூகமும் பண்பாடும் நலமோடு இயங்கிட முடிவுகள் மேற்கொள்வதும் அவற்றைச் செயல்படுத்துவதும். வெற்றிச் சாதனைகளின் நுழைவாயில் நம் எண்ணங்கள். சரியான எண்ணங்களே நம்மைச் சரியான செயல்பாட்டிற்கு இட்டுச்செல்லும். சமூக ஏற்றத்

தாழ்வுகளையும் அநீதிகளையும் தவிடு பொடியாக்கி சமநீதிச் சமூகத்தை நோக்கி நம்மை உந்தித் தள்ளும் ஆற்றல்மிக்க ஆயுதம் நம் எண்ணங்கள். பல நூற்றாண்டுத் தூசுகளையும் மாசுகளையும் துடைத்தெறியத் துணையாவது நமது எண்ணத் துடைப்பான். எனவே வான்புகழ் வள்ளுவனும் உள்ளத்தனையது உயர்வு என்பான். மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்பான்.

பொருட் செல்வங்கள் நம்மிடையே பொங்கி வழியலாம். ஆனால் எண்ணங்களில் ஏற்றம் இல்லாவிட்டால் சிந்தனையில் பின்னோக்கி நகர்வோம். எப்போதோ விட்டொழித்திருக்க வேண்டிய பழங் குப்பைகளையும் பிற்போக்கான மூடப்பழக்கங்களையும் நமக்குள் குடியேற்றி நானிலத்தை நலிவடையச் செய்வோம்.

தமிழ்கூறு நல்லுலகின் அன்பறிவுத் தேடலென நண்பர் தாழை. உதயநேசன் இந்நூலைப் படைத்துள்ளார். காலைநேரத்துக் கதிரொளியென நம் மனதுக்குள் பரவுகிறார். இது அவரின் இன்னுமொரு எண்ணம்விடு தூது.

இவரின் கவிதையில் அப்பா நாளும் நலம் பேணும் தோள் கொடுக்கும் தோழனாகிறார். தாயைப் போற்றித் தந்தையை மறக்கும் தரணியில் தந்தைக்கே அவரின் முதல் தாலாட்டு.

அன்பை இழுப்பது நம் ஆன்மாவை தொலைப்பது. அன்பில் திளைப்பதே நம் வாழ்வின் வைகறைச் சுவாசிப்பு என்று அடைக்கும் தாழ் இல்லாத அன்பைக் கவிதையாக்குகிறார்.

பழைய சோறும் பச்சை மிளகாயும் உள்ளன்பு நிறைந்த ஓலைக் குடிசையும் ஓடி விளையாடிய உறங்காப் பொழுதுகளும் கணினி உலகிலும் அவர் நெஞ்சம் நிறைக்கின்றன. கண்கள் பனிக்கின்றன.

சாதிமூடச் சாத்திரமறுத்து வீதி தோறும்

விளக்கேற்றும் பாட்டுக்கொரு புலவன் பாரதியைத் தனது பரிதி நிகர்ப் பைந்தமிழ் வரிகளால் பாசமோடு வருடுகிறார்.

பொன்னகை போற்றும் பித்தர்கள் நடுவில் நம்பிக்கைக் கனவே நமக்கு நகை என்று புத்தொளி பாய்ச்சி புதுத்தெம்பூட்டுகிறார்.

இதயமும் மனமும் இறந்து கொண்டிருக்கும் திசைகளற்ற உலகில் தமிழ் நம் முகவரி. நம் வானம். நம் மூச்சு. நம் இதயம் என்கிறார்.

பாசமும் நேசமும் பாட்டி தாத்தாவின் பேரன்பும் பெற்றோரே பெற்றோர். மற்றோர் மானுடம் அற்றோர் என்கிறார்.

வண்ணக் கனவுகளால் உன் எண்ணச் சிறகு விரி! பெண்ணே! புரட்சிப் பெண்ணே! வானம் உனக்கு வாகை சூடும் என்கிறார்.

சாதி மதச் சாத்திரப் பிரிவுகள் போக்கி வீதிகள் தோறும் மனிதம் காத்திட மானுடம் விழித்தெழ வேண்டும் என்று புதிய விடியலுக்குப் பூபாளம் பாடுகிறார்.

காடுகளை நேசி. வாட்டும் வறட்சியை யோசி. புதிய தலைமுறைக்காய் பொறுப்போடு வாசி என்று பசுமை வாழ்விற்காய் ஒரு பரிந்துரை செய்கிறார்.

மனிதம் விதைத்தால் மானுடம் வெல்லும். அன்பில் அகிலம் விடியும் என்கிறார்.

கவிதை ஒவ்வொன்றும் கற்கண்டு. கவிஞர் கண்டெடுத்த பூச்செண்டு. யாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம் என்று சிறந்ததொரு நூலை நமது சிந்தைக்குப் படைத்துள்ளார்.

வானமெங்கும் குண்டு மழை பொழியும் போர்க்கால உலகில் கவிஞர் நம் உள்ளமெங்கும் கவிதை மழை பொழிகின்றார்.

இவர் படைத்தளிக்கும் இந்த இலக்கியச் சோலையில் எவரும் தங்கி இளைப்பாறலாம். களைப்பு நீங்கிக் களிப்புறலாம்.

அன்பில் தொடங்கி அன்பில் முடியும் அருமை நூலிது. அன்பே நமது அசைக்க முடியாத ஆணிவேர். நாம் எழுவதும் வாழ்வதும் அன்பினால் மட்டுமே என்பதை நூலெங்கும் அமுதமெனப் பெய்துள்ளார்.

கவிஞரும் இனிய நண்பரும் தமிழ் காக்கும் நற்மிழ்க் காவலருமான தாழை. இரா. உதயநேசன் அய்யா அவர்களின் இந் நூல் தமிழர் நெஞ்சங்களில் வற்றாத ஊற்றென தமிழ் சுரக்கும்.

படிப்போம்!

பயன் பெறுவோம்!

நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகள்!

சோ. பிலிப் சுதாகர்,
ஆதரவற்ற தொழிலாளர் நலப் பணி,
தமிழ்நாடு ஆதவன் உலகச் செம்மொழி தமிழ்ச் சங்கம்,
திண்டுக்கல்
27-09-2024

என்னுரை

என்ணமே ஏற்றம் தரும்

"எண்ணங்கள் சிதைந்தால் எங்கே போவது."

"மனித மனம் ஆழ்கடல் போன்றது. நீந்திப் பிழைத்தோர் வெகு சிலரே". மனதின் ஆழம் அறியமுடியா விசித்திரம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆயிரம் எண்ணங்கள் அலைபோல் ஓடிக்கொண்டேயிருக்கும். ஒருவர் தன் எண்ணங்களை ஆள்வது தான் உலகில் தலைசிறந்தசெயல்என்றேஎனக்குத்தோன்றுகிறது. எந்தக் கடிவாளத்தினாலும் அடக்க முடியாத ஒன்று நம் எண்ணங்கள். ஒருவர் உள்ளத்தில் இருப்பதை இன்னொருவர் அறிய முடியாது. நம் அருகில் இருப்பவரின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பதை முழுமையாகக் கணிக்க இயலாது.

மனிதனின் அனைத்துக் காலத்திலும் கூடவே பயணிக்கும் எண்ணங்கள் ஒருநாளும் சோர்ந்துபோவதில்லை. உடல் சோர்வு அல்லது மனச்சோர்வு ஏற்படுவதுண்டு. ஆனால், கவனமாக உற்றுநோக்கின், நம்முள் உறங்கும் எண்ணங்கள் தளர்வினை ஏற்காது. கனவு, ஏக்கம், சோகம், இன்பம், துன்பம், இலக்கு மற்றும் குறிக்கோள் ஆகியவற்றின் ஓர் வண்ணக்கலவை தான் இந்த எண்ணங்கள். இவ்வகையான எண்ணங்களை நாம் எவ்வாறு மேற்கொள்கிறோம் என்பதே வாழ்வில் நமக்கு முன்னிருக்கும் மிகப்பெரிய சவால். எண்ணங்கள் ஏற்புடையதாயிருந்தால் நம் வாழ்வு மண்ணில் சிறக்கும். அதை உறுதிபட எடுத்துரைப்பதே “எண்ண மே ஏற்றம் தரும்” நூல்.

ஒருமித்த எண்ணங்கள் ஒன்றையொன்று ஈர்க்கும் என்பது தான் இயற்கையின் நியதி. ஒரு மனிதன் எதை திரும்ப திரும்ப எண்ணுகிறானோ, அதுவாகவே மாறிவிடுகிறான் என்பதில் ஐயமில்லை. அவன் எண்ணும் எண்ணங்களால் அவன் ஈர்க்கப்பட, அவன் உள்மனம் அவனையும் அறியாமல் அந்த எண்ணத்திற்கு உருவம் கொடுத்துவிடும். அந்த உருவத்தின் மீது ஒருவன் வைக்கும் நம்பிக்கையும் வைராக்கியமும் அதற்கு செயல் வடிவம் கொடுத்துவிடுகிறது. இப்படியொரு

ஆழமானக் கருத்தை தன்னுள் தாங்கி வருகிறது இந்த எண்ண மே ஏற்றம் தரும் நூல்.

“எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியர் ஆகப்பெரின்”

ஒரு செயலைத் திட்டமிட்டு எண்ணியவர், எண்ணியபடியே செயலாற்ற மனஉறுதியோடு இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியபடியே அடைவர் என்று திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

“எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணவேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்”

என்று மகாகவி பாரதியார் தெளிவுபட கூறுகிறார். ஆகவே, நம்முள் இருக்கும் எண்ணங்கள் நல்லவையாகவே இருக்கட்டும். நல்ல எண்ணத்தை விதைத்து நல்ல செயலை அறுவடை செய்வோம். நாம் செல்லுமிடமெங்கும் நல்ல மனமும் நல்ல குணமும் விதைக்கும் கருவிகளாய் வாழ வேண்டும். ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லாமல், புவியில் பிறந்த அனைவரும் சாதிக்க நல்ல எண்ணங்கள் நம் மனங்களில் உதிக்கட்டும்.

எனது எழுத்துப்பணியில் மிகவும் உறுதுணையாக இருக்கும் என் மனைவி

வீ.ளீ. கலையரசிக்கு நன்றிகளைக் கூறுவதில் பெருமைப்படுகிறேன். எனது வளர்ச்சியின் ஏணிப்படி என் மனைவியே என்பதை இங்கு சொல்வதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

டுடே கிராபிக்ஸ், சென்னை – அவர்களுக்கும் நான் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். இந்தப் புத்தகத்தை சிறப்பாக வடிவமைத்து, அச்சிட்டவர். இதற்கு உறுதுணையாக இருந்த அச்சகக் குழுவினருக்கும் நன்றிகள் பல.

எனது கவிதை நூலுக்கு சிறந்த முறையில் அணிந்துரை வழங்கிய .... அவர்களுக்கு மகிழ்வுடன் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். பல வேலைகளுக்கு மத்தியில், ஊக்கமளிக்கும் வகையில் எழுதிய அணிந்துரை இந்நூலுக்கு மேலும் சிறப்பளிக்கின்றது.

மேலும், எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் எழுத்துலக நண்பர்கள், கவியுறவுகள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

நன்றியுடன்,

தாழை. இரா. உதயநேசன்

வட அமெரிக்கா

பொருளடக்கம்

1. அன்புள்ள அப்பா..!!

கருவினில் இருக்கையில் கரங்களால் வருடி
திருமுகம் மலர்ந்த தந்தையின் அன்பு
உள்ளம் முழுதும் உணர்வுகள் குவித்து
அள்ளி அணைக்கும் அப்பா வாழ்க

ஆயிரம் உறவும் ஆகுமோ ஈடாய்
தாயிற்கு ஈடாம் தந்தை அவருக்கே
தோள் கொடுக்கும் தோழனும் அவரே
நாள்தோறும் எம்மின் நலம் பேணுவாரே

பள்ளிப் பருவம் பயின்றிட வைத்து
துள்ளி விளையாட துன்பங்கள் மறந்து
வியர்வைச் சிந்தி விடுப்புகள் இன்றி
உயர்வைப் போதிக்கும் உத்தமர் வாழி

எண்ணமே ஏற்றம் தரும்

நிழலாய் நின்று நிம்மதி அளித்து
பழகிட இனிக்கும் பாசத்தின் உருவே
கண்ணீர் துடைத்துக் கவலைகள் மறைத்து
மண்ணில் உழைக்கும் மாசற்ற உறவே

அன்பு பாசம் அகத்தில் வைத்து
இன்முகம் கொண்டு இனிதாய்க் கண்டித்து
தம்முள் தைரியம் துணிவு கொண்டு
இம்மையில் ஒளியாம் இறைமையே வாழி

தந்தை என்றும் தரணியில் வள்ளலே
சிந்தை முழுவதும் நினைவுகள் துள்ளலே
உந்தன் சொற்களில் உயர்வுகள் கிட்ட
எந்தன் வழிகள் ஏற்றம் கொள்ளுமே

அப்பழுக் கின்றி அனைத்தும் தாங்கி
அப்பா என்றதும் அகமகிழ்ந்து நிற்பாய்
எப்பிறப்பு இப்புவியில் எப்பொழுது எய்தினாலும்
அப்பிறப்பை உன்பிறப்பால் அடைந்திடவே ஏங்குகிறேன்

2. அன்பை விதைத்து அறுவடை செய்..!

அன்பெனும் மெய்ப்பொருள் அடகு வைத்து
துன்பத்தைத் துரத்தி துயர்தனை அடைந்து
கற்கள் போலே கடினம் கொண்டு
அற்பப் பதராய் நிற்பது தகுமோ?

ஆதாயம் தேட ஆசைகள் வளர்த்தோம்
ஆன்மாவின் உள்ளே ஆனந்தம் தொலைத்தோம்
தான் என்றே தனிமையில் உறைந்தோம்
ஆதாரத் தூணாம் அன்பினை மறந்தோம்

பெற்றவர் பாசம் பெற்றிட எண்ணி
உற்றவர் எவரின் உறுதுணை இன்றி
தவித்திடும் உள்ளம் தரணியில் உண்டென
கவிதனில் சொல்கிறேன் கவலைகள் கொண்டே

வறுமைப் பிடியில் வாழ்வை இழந்து
சிறுமை அடைந்து செழுமை இன்றி
உறவுகள் வாழும் உலகம் இதிலே
அன்பெனும் ஆதரவு அன்றாடம் கொடுப்போம்

பள்ளிப் பருவத்தில் பசியுடன் அலைந்து
துள்ளி விளையாடும் ஆசைகள் துறந்து
குழந்தைத் தொழிலில் குறுகி நிற்கும்
மழலை உள்ளங்கள் மனிதம் காணட்டும்

விதைகள் போலே விதைத்துக் காத்து
சிதைவுகள் இன்றி சிந்தனை தெளிந்து
மனித மனங்களில் மனித நேயம்
இனிதே வளர்ப்போம் இகத்தினில் என்றும்

விருப்பு வெறுப்புகள் வெகுவாய்த் தள்ளி
அருமை அன்பை அள்ளித் தருவோம்
மறுப்பின்றி நாளும் மகிழ்ச்சி விதைத்து
அறுவடை செய்வோம் ஆருயிர் உறவையே

இதயம் அனைத்தும் இறுக்கம் தளர்த்து
உதயம் ஆகட்டும் உள்ளன்பு பெருகட்டும்
அறமும் கனிவும் அகத்தினில் வளர்ந்து
பிறக்கட்டும் இங்கே பாசத்தின் ஊற்று

காந்தியும் ஏசுவும் காண்பித்த வழி
ஏந்திக் கொள்வோம் எண்ணத்தில் இன்று
பாசமும் நேசமும் பாரினில் ஊற்றி
அன்பெனும் பிடிதனில் அகிலத்தைச்
சிறைவைப்போம்

அன்பின் ஆட்சி அழகாய் அமைத்து
இன்பம் பொங்கும் இகத்தினைப் படைப்போம்
முகங்கள் மலர முகவரி கொடுப்போம்
சுகமான வாழ்வில் சொந்தங்கள் சேர்ப்போம்

3. இளமைக்கால இன்ப நினைவுகள்..!

மறக்க முடியா மலரும் நினைவுகள்
பறந்து திரிந்தப் பள்ளிப் பருவங்கள்
சிறகுகள் விரித்துப் பறவைகள் போலே
சுற்றி வந்த இன்பக் காலங்கள்

மழலை மாறா மலர்ந்த முகத்துடன்
மனதில் பயமின்றி தந்தை மடியமர்ந்து
மண்ணில் விரலால் அகரம் எழுதி
பழகிய நாட்களும் மறக்க முடியுமா?

அடிகள் வாங்கி அழுதுக் கொண்டே
எண் கணிதம் எளிதாய்க் கற்று
இரவு நேரம் தரையில் படுத்து
விண்மீன் எண்ணியது மறக்க முடியுமா?

விடுமுறை நாளில் விளையாடி மகிழ்ந்து
சுடும் வெயிலில் சுற்றித் திரிந்து
களைப்பு மறந்து களிப்புடன் இருந்த
அந்தக் காலம் மறக்க முடியுமா?


மழையில் நனைந்து மழைத்துளிப் பிடித்து
காகிதக் கப்பல் அனுப்பி வைத்து
நண்பர் கூட்டம் நடுவில் நின்று
ரசித்தக் காலம் மறக்க முடியுமா?

சின்னச் சின்ன சேட்டைகள் செய்து
சிட்டாய்ப் பறந்து ஒளிந்து கொண்டு
சினங்கொண்ட தாயை சிரிப்புடன் பார்த்து
அவளின் சிந்தைக் கவர்ந்ததும் சுகமே

கண்ணாய்க் காக்கும் தாத்தா பாட்டி
முற்றத்து வீட்டின் திண்ணையில் அமர்ந்து
வியத்தகு கதைகள் சொல்லி வளர்த்து
வைத்தியம் பார்த்ததும் மறக்க முடியுமா?

கொத்து கொத்தாய்ப் பூக்கும் மலர்கள்
விடியலில் எழுப்பும் கொண்டைச் சேவல்கள்
பச்சை பசுமையாய் நெல் வயல்கள்
பார்த்து ரசித்ததும் மறக்க முடியுமா?

பழைய சோறும் பச்சை மிளகாயும்
பாசம் நிறைந்த ஓலைக் குடிசையும்
சிந்தையைச் சிறைபிடித்த கணினி உலகில்
ஏக்கம் தீருமோ – மீண்டும் கிடைக்குமோ?



4. சூரிய நிலவாய் பாரதி...!

எட்டய புரத்தின் எட்டாம் அதிசயம்
சொட்டும் கனிரச கவிதையும் நீ
எட்டுத் திக்கும் எதிரொலி எழுப்பும்
பட்டயம் இல்லா போர்க்களம் நீ

பார் போற்றும் பாரதி நீ
போர் முழக்கம் கொண்டவன் நீ
நீரும் நிலமும் நிமிர்ந்து வாழ்த்த
ஊரும் வியக்கும் வியப்பு நீ

பெண்ணின் விலங்குகள் பெயர்த்து எறிய
மண்ணில் உதித்த மாணிக்கம் நீ
புதுமைகள் தந்து புதுப்பாட்டுப் பாடி
புதுவழி காட்டிய புலவனும் நீ

தமிழ்மொழி அதிலே தனித்துவம் பெற்று
திமிராய் போர்க்கொடி எடுத்தவன் நீ
எழுச்சிக் கவிகளாய் எடுத்தாளும் சொற்களில்
எழுந்தே ஆதிக்கம் எதிர்த்தவன் நீ

சாதிகள் இல்லையென சாத்திரம் அறுத்தவன்
வீதிகள் தோறும் விளக்கொளி தந்தவன்
சோதிகள் வெளிச்சத்தில் சோம்பல் தகர்த்திட
சேதிகள் சொன்ன சிம்மாசனம் நீ

சுதந்திரக் காற்றை சுகமாய் சுவாசித்து
வதம் செய்யும் வார்த்தைகள் நீ
வித விதமாய் விழிப்புணர்வு தந்து
இதமானப் பாட்டுகள் இசைத்தவன் நீ

கண்ணம்மா என்றாய் கவிதைகள் தந்தாய்
கண்கள் வியக்கும் காதலைச் சொன்னாய்
பெண்களை மயக்கும் பெண்ணிலவு போலே
மண்ணில் முளைத்தாய் முண்டாசுக் கவிஞனே

பேனா முனையில் பேதம் அகற்ற
தானாய் முழங்கிய தோழன் நீ
ஆதவன் போலே ஆவேசம் கொண்டு
கானங்கள் இசையிலே குளிர்நிலவு ஆனாய்

5. தடை அதை உடை..!

விழுந்தால் மீண்டும் விதையாய் கிளம்பு
விழுதுகள் துளிர்த்து விருட்சமாய் எழும்பு
விடியும் பொழுதில் விந்தைகள் விரும்பு
விடியல் பிறப்பில் இனித்திடும் கரும்பு

முயற்சிகள் செய்து முயன்றிடு இன்றே
பயங்கள் நீக்கி பறந்திடு சென்றே
மனம் விழித்தால் மழையும் குன்றே
சினம் குறைத்தால் உயர்வாய் நன்றே

நடக்கும் என்றே நம்பிடு தோழா
கடக்கும் பாதையில் கனவுண்டு தோழா
நம்பிக்கை நகையாய்த் தரித்திடு தோழா
அம்புலி என்றும் உன்கையில் தோழா

௬. தமிழை சுவாசிப்போம்..!

அழகிய மொழியாம் அன்னைத் தமிழாம்
பழமை மிகுந்த பாசத்தின் மொழியாம்
மென்மையும் மேன்மையும் பெற்ற தமிழாம்
வன்முறை இன்றி வளம்தரும் மொழியாம்

நாவினில் பேசிட நாதம் இசைக்கும்
பூவினில் இதுபோல் புதுமொழி உண்டோ
வாசிக்கும் பொழுதிலே வாசனை வீசிடும்
சுவாசமாம் எங்கள் சுந்தர மொழியே

ஐம்பெரும் காப்பியம் ஐந்திணை உடையவள்
தெம்மாங்கு இசையும் தெளிவாய்க் கொண்டவள்
உலகப் பொதுமறை உலகிற்கு அளித்தவள்
நலமான வாழ்விற்கு நியதிகள் தந்தவள்

கம்பன் கவிகளில் கர்ச்சித்து நின்றவள்
அம்மாவின் அன்பை அழகாய்ச் சொல்பவள்
இதயத்தின் வலிகள் இதமாய்த் துடைப்பவள்
உதடுகள் வாழ்த்தும் உயிரின் துடிப்பிவள்

பாரதி பாட்டிலும் பாவேந்தர் வாக்கிலும்
சாரம் கொண்டு சீறிய மொழியாம்
தேனினும் இனிய தெவிட்டாத செந்தமிழ்
வானினும் உயர்ந்த வீர மொழியாம்

இகமே போனாலும் முதுமை வந்தாலும்
முகவரி இழக்காது முத்தாய் மின்னிடும்
மக்கள் மனதில் மறையாது நின்று
எக்காலம் நிலைக்கும் என்னுயிர் தமிழாம்

பிழையின்றி எழுதி பிரிவினை மறந்து
அழையாது வாழ்வோம் அந்நிய மொழிகளை
எண்ணங்கள் மேலாக்கி எதிரிகள் கீழாக்கி
திண்ணமாய் நிற்கும் தமிழ்மொழி சுவாசிப்போம்

7. தை பிறந்தால் வழி பிறக்கும்..!

மார்கழிப் பனியும் மறைந்தது எங்கும்
மாக்கோலம் பூண்டது வாசல்கள் எங்கும்
மாவிலைத் தோரணம் மனத்தினை மயக்கும்
மாறாத மலராம் தைமகள் பிறந்தாள்

புதுப்பானை அதிலே புத்தரிசி இட்டு
புதுவெல்லம் சேர்க்க மஞ்சள் மணக்க
பொங்கல் பொங்கிடும் பொன்னான நாளிலே
புதுமகள் வந்தாள் புத்துயிர் அளிக்கவே

தொடுவது எல்லாம் பொன்னாய் மாறும்
பொங்கல் பொங்கிட மங்களம் செழிக்கும்
இல்லந் தோறும் கரும்புகள் இனிக்கும்
எல்லா மனமும் எழுச்சியால் நிரம்பும்

உழைக்கும் உழவர் உள்ளம் மகிழும்
உன்னதத் திருநாள் உவகை அளிக்கும்
உழவும் தொழிலும் நன்றே சிறக்கும்
தைமகள் பிறப்பை உலகம் போற்றும்

தரணி எங்கும் தன்னலம் நீங்கும்
தரமில்லா எண்ணங்கள் தரையோடு மடியும்
தவறான வழிகள் தாழ்ச்சி அடையும்
தைமகள் பிறப்பில் தைரியம் உதிக்கும்

அன்பு உள்ளங்கள் அகிலத்தில் பெருகும்
அளவில்லா அமைதி அன்றாடம் கிடைக்கும்
அறநெறி எல்லாம் அதிகம் துளிர்க்கும்
தைமகள் பிறக்க நல்வழியும் பிறக்கும்

பாட்டாளி வர்க்கம் பாரிலே செழிக்கும்
பார்போற்றும் வகைதனில் பாதைகள் உயரும்
பாமரர் அவரின் பாடுகள் மறையும்
தைமகள் உதிக்க உழவும் பெருகும்

8. நேசிக்கலாம் வாங்க..!

நேசம் ஒன்றை நேயமுடன் தேடி
பாசம் அதையே பண்புடன் நாடி
வேசம் களைந்து வேதனைத் தவிர்த்து
வாசம் வீசி உறவுகள் வளர்ப்போம்

சொர்க்கம் என்பது சொந்தம் நிறைந்தது
தர்க்கம் இன்றி தன்மையுடன் நடப்போம்
உறவுகள் நேசிக்க உள்ளம் மகிழ்ந்து
அறம் தழைக்குமே அனுதினம் இங்கே

கூட்டாய் அனைவரும் கூடி வாழ்ந்து
பாட்டி தாத்தா பாசத்தில் நனைந்து
பாட்டும் கதையும் போட்டி போட்டு
கேட்டு மகிழ்ந்தக் காலம் வேண்டும்

அன்னையும் தந்தையும் அறிவுரை சொல்ல
துன்பம் துக்கம் தூர விலக
இன்பங்கள் மிகுதியில் இனிமை பொங்க
அன்புடன் வளர்ந்த ஆண்டுகள் வேண்டும்

பெற்றவர் நாளும் பெருமை கொள்ள
உற்றவர் யாவரும் உன்னில் மகிழ
இணையம் தவிர்த்து இதயம் உணர்ந்து
உள்ளத்தால் நாமும் உறவுடன் இணைவோம்

நேச மலர்கள் நெஞ்சில் விதைத்தால்
மண்ணில் வாழ்வு தனிமை ஆகாது
மறவாது நாமும் மண்ணில் உள்ளவரை
உயிர்ப்புடன் நேசம் வளர்த்து மகிழ்வோம்

உள்ளங்கள் உடையாது உறவுகள் விலகாது
கள்ளம் கபடுகள் கடிந்து அகற்று
கண்ணின் இமையாய்க் கருத்துடன் என்றும்
பண்புடன் நாமே நேசம் வளர்ப்போமே

௯. பொங்கலோ பொங்கல்..!

பழமைப் போற்றும் பண்பாட்டுத் திருவிழா
புத்தாடை பொலிவிலே புத்தரிசி புதுவிழா
உழவர் மாண்பின் உவகைப் பெருவிழா
நற்காலைப் பொழுதிலே நிகரில்லா நல்விழா

ஆடிப்பட்டம் தேடி விதைத்த விதைகள்
ஆலோலம் பாடி அறுவடை ஆகிட
ஆதவன் சிரிப்பினில் ஆனந்தம் பிறந்ததம்மா
மாதவம் செய்த மானுடம் செழிக்குதம்மா

வெண்ணிற அரிசியில் வெள்ளம் சேர்த்து
பால்போல் பொங்கல் பாடல் பாடி
வெண்முத்துப் போலே மண்பானை மின்ன
கண்ணோரம் ஆனந்தம் அழகாய்த் தெரியுதம்மா

மங்கையர் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்திட
மஞ்சள் கொத்தும் மங்களம் அருளிட
செங்கரும்பு இனிக்க சொந்தங்கள் வாழ்த்த
மங்களம் பிறந்ததில் மனமும் மயங்குதம்மா

மாவிலைத் தோரணம் நெஞ்சத்தை வருட
உழவர் யாவரும் என்றும் சிறக்க
கதிரவன் ஒளியில் கையெடுத்து மகிழ
பொங்கலோ பொங்கல் – பொங்கலோ பொங்கல்

10. பார் போற்றும் பாரதி..!!

அஞ்சா சிங்கம் அழகுக் கவிஞன்
நெஞ்சம் நிமிர்த்தும் நெஞ்சுரக் கலைஞன்
கொஞ்சும் மொழியின் புதுமை வித்தகன்
விஞ்சும் உந்தன் மொழிப்பற்று வாழ்க

எழுச்சி தந்தாய் எழுத்து வடிவிலே
விழுப்புண் வரினும் வீழாது புவியிலே
உழுதாய் மனங்களை உள்ளத்துக் கவியிலே
எழும்பும் சூரிய ஒளியாய் நின்றவன்

சுதந்திர வேட்கை சுமந்து விதைத்து
விதமாய்ப் பாட்டுகள் பாடி மகிழ்ந்து
அந்நிய அடிமையை அறுத்து எறிந்து
பொன்னி நதியாய் பொங்குபவன் நீ

பேதம் நீக்க சாதி ஒழிக்க
நாதம் இசைத்த நற்றமிழ் மைந்தனே
சாதிக்கத் தூண்டும் வேள்வித் தீயினை
வீதிகள் தோறும் விதைத்தவன் நீ

முறுக்கிய மீசையும் முண்டாசுக் கிரீடமும்
மறுக்குமோ உந்தன் மாவீரம் தனையே
செருக்கு மிகுந்த செந்தமிழ் கவிகளில்
பொறுக்காத நெஞ்சும் பொங்கி எழுமே

செந்தமிழ் நாட்டின் செம்மொழி தீரன்
பைந்தமிழ் பெற்ற பன்முகக் கலைஞன்
மழலை நெஞ்சிலும் பாட்டாய் நின்றவன்
மண்ணும் மொழியும் வாழ்த்தும் உனையே

11. பெண்ணியத்தின் புரிதல் இலக்கணம்..!

பண்பாடு என்றார் பழமை என்றார்
மண்ணுக் கீடாய் மிதித்து நின்றார்
கண்ணுக்குள் இமையாய்க் கருவைச் சுமந்தும்
எண்ணிப் பார்ப்பார் எவரும் உண்டோ?

பெண்ணுடன் பிறந்து பெண்ணுடன் வளர்ந்து
பெண்மனம் எதுவெனப் புரியாது வாழ்ந்து
சித்திரம் வரைந்தும் சிறப்புறச் செய்தும்
இத்தரை மீதிலே இழிவெனச் செல்வதேனோ?

நிலமும் நீரும் மண்ணும் மொழியும்
பெண்ணென வகுத்துப் பெருமைப் பேசி
பெண்மீது வன்மம் பெரிதாய்ப் புகுத்தி
பெண்ணியம் பேசுதல் புவிதனில் தகுமோ?

கங்கைபோல் கொண்ட கனவும் ஆசையும்
மங்கையின் மனதில் மூழ்குதே நிதமும்
இன்னல் இடர்கள் இகத்தினில் பெருகி
இன்னும் எதிர்ப்புகள் எத்தனை வருமோ?

ஆணுக்கு நிகராய் ஆளப் பிறந்தவள்
காணும் துறைதனில் கொடிகள் நாட்டியவள்
பூணும் வெற்றிகள் பூக்களாய் மலர
பேணும் மரபுகள் புரிதல் அவசியம்

அஞ்சாமல் உயர அனுமதி தேடாது
நெஞ்சுரம் கொண்டு நிமிர்ந்திடு நீ
அறியாமை இருளை அடியோடு அகற்றி
நெறியுடன் வாழ்வாய் நிகரின்றி நீ

சாத்திரம் உடைத்து சாதனைப் புரிந்து
காத்திடு என்றும் காரிகைப் புகழே
வேகம் கொண்டு வேலிகள் அறுத்து
சோகம் வெல்வாய் சோதியே நீ

புரட்சிப் பெண்ணே புயலெனக் கிளம்பு
வரமென வந்தவளே வாகைகள் சூடு
சரித்திரம் போற்றிடும் சமத்துவம் படைத்து
சிரித்திடு பெண்ணே சிறகுகள் விரித்து

12. பெண்மையே போற்றி..!!

அருந்தனிப் பிறவி அன்பின் உருவே
அருமை பெருமை ஆயிரம் கொண்டவளே
மடை போலே மனம் கொண்டவள்
விடை அறியா விசித்திரம் தானே

வசந்தம் தந்திடும் வரம் நீயடி
நிசப்த வார்த்தையில் நிற்பவள் நீயடி
வலம்வரும் நிலவின் வடிவம் நீயடி
பலம் மிகுந்த பால்மனம் நீயடி

அடிமை எண்ணம் அறுத்து எறிந்தவள்
படிப்பும் பதவியும் பாங்காய் அடைந்தவள்
வெற்றி முரசில் வெளிச்சம் கண்டவள்
சுற்றிச் சுழலும் சுந்தர பெண்ணிவள்

தியாகச் சுடரின் திருவுரு நீயடி
வியாபித்து நிற்கும் விந்தை நீயடி
அர்ப்பணம் மிகுந்த அல்லி நீயடி
தர்க்கம் செய்யும் வஞ்சி நீயடி

சாரல் மொழியால் சாதிப்பாய் நீயே
பாரம் ஏற்கும் பெருமனம் நீயே
கானம் இசைக்கும் காரிகை நீயே
வானம் எட்டும் வலியும் உனதே

சத்தமின்றி யுத்தமின்றி சண்டைகள் செய்து
மொத்தமாய் காரியம் முடித்திட வைத்து
அளவின்றி அன்பை அருமையாய் விதைத்து
வளம் சேர்ப்பாள் வேதனைத் தீர்ப்பாள்

நம்மை சுமந்து நலமாய் வளர்த்து
தம் சுமையெல்லாம் தனக்குள் மறைத்து
உறவுகள் பேணி உள்ளம் மகிழ்ந்து
உறக்கம் தவிர்க்கும் உன்னத பிறவி

வெண்பனி நனைந்து வெயிலில் காய்ந்து
கண்மணி போலே கருத்துடன் காத்து
கரங்களில் ரேகை கண்டாலும் – என்றும்
தரத்தில் பிழையில்லா தாய்மை வாழ்க

பிரிய மாய் உழைக்கும் பிரபஞ்ச வடிவே
சிரிப்புடன் சுழலும் சிங்காரச் சிட்டே
புகுந்திடும் வீட்டிலே புதுமைகள் படைப்பவளே
மிகுந்த பெண்மை மென்மேலும் ஓங்கட்டும்



13. மனிதம் போற்று..!

பட்டினி ஓலம் பசிப்பிணி அவலம்
மட்டின்றி நாளும் மாய்க்குதே உயிர்தனை
வறுமையும் கொடுமையும் வேகமே வந்து
மறுக்காமல் விலகாமல் மோதுதே இங்கே

நன்மையும் தீமையும் நன்றாய் அறியுமுன்னே
வன்மக் கண்கள் வன்புணர்வு செய்து
தெய்வக் கருவறையில் துடிப்பினைச் சிதைத்து
மெய் வருத்தினான் - மனிதம் எங்கே?

கண்கள் எதிரே கவலைகள் நிறைந்து
மண்ணில் உழலும் மானிடர் உண்டு
முகம் தெரியா முகநூல் மனிதம்
முகத்துக்கு நேரே மலருமா இங்கு?

மகிழ்வின் சாரம் மனித நேயம்
அகிலம் உயர்த்தும் ஆணிவேர் அன்றோ
சரிசமம் உயிரென சகலமும் மதித்தால்
பிரிவினை வருமோ புவிதனில் சொல்

அண்ணன் தம்பியாய் அனைவரும் சேர்ந்து
மண்ணில் நாளும் மாண்புகள் வளர்த்து
உறவுகள் போற்றி உள்ளம் நிறைக்கும்
அறம் செழிக்கவே அன்பை விதை

பணம் ஒன்றே பாசம் வளர்க்குமோ
குணம் போற்றிட கூடுவோம் நாமே
மனிதர் மனமும்   மதுரமாய் இனிக்க
இனிய பண்புகள் இகத்தினில் பெருகட்டும்

சாதியும் மதமும் சாத்திரம் அனைத்தும்
போதித்துப் பிரிக்கும் பிரிவுகள் உடைத்து
நீதியும் நியாயமும் நீங்காது வளர்த்து
வீதிகள் தோறும் மனிதம் விதைப்போம்

14. யாமறிந்த மொழிகளிலே..!

தேனும் பாலும் தன்னுள் கொண்டு
வானும் மண்ணும் வாழ்த்தும் மொழியே
காணும் திசையெங்கும் காவியம் ஆனாய்
நானும் வணங்கி வாழ்த்துகிறேன் உனையே.

தனியாய் தரணியில் உதித்த மொழி
கனியாய் நாவில் இனிக்கும் மொழி
பனியாய் நெஞ்சில் சிலிர்க்கும் மொழி
இனிமை மிகுந்த இலக்கிய மொழி

மெல்லினம் வல்லினம் இடையினம் நீ
மெல்லிசை மீட்டும் மூத்தவள் நீ
முக்கனி சுவையும் முப்பாலும் நீ
எக்காலம் இலக்கணம் மாறாத மொழி

அறிஞர் யாவரின் களஞ்சியம் நீ
அள்ளக் குறையாத அமிழ்தம் நீ
துடிக்கும் இதயத்தின் துடிப்பு நீ
விடியல் காட்டும் விந்தை மொழி

இலக்கண இலக்கிய இமயம் நீ
இலக்குகள் அமைக்கும் இன்பம் நீ
சிந்தனை மிகுந்த செம்மொழி நீ
வந்தனம் செய்வோம் வாழ்க நீ

மன்னர் போற்றும் முத்தமிழ் நீ
மதுரை சங்கத்தில் மாண்புகள் நீ
முழக்கம் கொண்டே முன்னேறும் மொழி
பழக்கம் பண்பாடு படைத்த மொழி

கவியரசன் கண்ட காதல் நீ
புவியில் பூத்த புதுமொழி நீ
கவிஞன் மனதில் கற்பனை நீ
கவிகள் அனைத்திலும் காந்தம் நீ

ஈரடியில் பொதுமறை இத்தரை அளித்தாய்
புலவனின் பாட்டிலே வளர்ந்தாய்
வேந்தர் போற்றும் விந்தைகள் செய்வாய்
மாந்தர் மனங்களில் மனிதம் வளர்த்தாய்

உலகம் போற்றும் உன்னத மொழியே
நிலவென உலாவரும் நித்திய மொழியே
தமிழர் அனைவரின் முகவரி மொழியே
தமிழே மொழியே தாயும் நீயே.



15. வருங்காலம் வசந்தகாலம்..!

இறைவன் அளித்த இனிய உலகம்
இறைத்தோம் வீணாய் இத்தரை மீதிலே
உறைந்தோம் சொகுசு உல்லாச வாழ்வில்
குறைவுகள் கண்டோம் கண்ணெதிரே தானே

நாகரீக மோகம் நாளும் வளர
வேகமாய் மரங்கள் வெட்டி வீழ்த்திட
தேகம் காக்கும் தேனான இயற்கை
வேகமே அழிவதும் சோகம் தானே

இயற்கைப் பாதைகள் இல்லாமல் செய்து
செயற்கை சாலைகள் செம்மையாய் அமைத்து
அழிவினை நோக்கி அசையாது சென்று
இழிநிலை அடைந்தோம் இதயம் குமுறுதே

காடுகள் கடல்கள் காக்க மறந்து
வாடுதே உயிர்கள் வாழ்விலே இன்று
நாடும் வீடும் நலமாய் விளங்க
நாடுவாய் மனிதா இயற்கை தனையே

வீட்டுக்கு வீடு வீதிகள் தோறும்
காட்டு மரங்கள் கனிவாய் வளர்த்து
வாட்டும் வெயிலின் வேகம் குறைத்து
நாட்டுவோம் இனிமை நாமும் இங்கே

பறக்கட்டும் எங்கும் பசுமை ஆடைகள்
சிறக்கட்டும் தலைமுறை சிறப்புடன் என்றும்
பிறக்கட்டும் மனிதம் இயற்கை மீது
துளிர்க்குமே செழுமை புவியினில் மீண்டும்

காடுகள் நேசித்துக் காப்போம் நாமே
வாட்டும் வறட்சி தகர்ப்போம் நாமே
வருங்காலம் வசந்தமாய் அமைப்போம் நாமே
வளரும் தலைமுறை வளங்கள் காணட்டும்

16. விழித்தெழுப் பெண்ணே..!

விடியல் தேடி விரையும் பெண்ணே
விடைகள் தேடி அலையும் பெண்ணே
அச்சம் மிகுந்த அழகுப் பெண்ணே
உச்சம் தொடவே விழித்தெழுப் பெண்ணே.

அடிமை எண்ணம் அகற்றிடு பெண்ணே
மடியும் எண்ணம் எரித்திடு பெண்ணே
கண்களின் கடிவாளம் எறிந்திடு பெண்ணே
விண்ணை முட்டும் விசைகொள் பெண்ணே.

கலிகாலம் என்ற கதைகள் வீழ்த்து
வலிகள் அனைத்தும் வீரமாய் மாற்று
வியர்வைத் துளியில் விதிகள் வகுத்து
உயரவே நீயும் விழித்தெழுப் பெண்ணே.

வன்மம் எதிர்த்து வன்முறைத் தகர்த்து
இன்னல் அனைத்தும் இத்தரை மிதித்து
கரங்கள் நீட்டிக் கண்ணீர் துடைத்து
சிரம் உயர்த்தி சிறகுகள் விரித்திடு

உறக்கம் தெளிந்து உற்சாகம் அடைந்து
பறந்திடு வானில் போர்முகம் கொண்டு
உலகம் உந்தன் உயிர்ப்பினைக் கண்டு
வந்தனம் செய்யட்டும் விழித்தெழுப் பெண்ணே.

அடுப்பின் அடியில் அடைந்தது போதும்
ஒடுங்கியே காலம் கழித்தது போதும்
துடிக்கும் புழுவாய் வாழ்ந்தது போதும்
விடியல் பிறந்தது விழித்தெழுப் பெண்ணே

17. ஜல்லிக்கட்டு மல்லுக்கட்டு..!

தமிழன் பெருமை தரணி அறியும்
ஏறுகள் தழுவிட வீரம் தெரியும்
பிள்ளைகள் போலே விளையாடி மகிழும்
கட்டுக் கடங்கா காளைகள் தானே.

துள்ளி துள்ளி துரத்தும் காளைகள்
வெள்ளி போலே மின்னும் கொம்புகள்
ஜல்லிக்கட்டு வேளையிலே மல்லுக்கட்டும் ஆடவரும்
கிள்ளிபோலே எழுவாரே போர்க்களம் காணவே.

கட்டுகள் அவிழ்த்தக் காளைகள் எல்லாம்
கட்டுடல் மேனியின் கண்கள் முன்பே
கட்டிப் பிடித்துக் கைகளில் அடக்கி
கட்டுவார் தாலி கன்னியர் கழுத்திலே
திமில்கள் நிமிர்த்தி திடமாய் நிற்கும்

தமிழன் வளர்த்தக் காளைகள் மின்னும்
உறுமல் ஒலியும் சீற்றம் கொள்ளும்
திமிருடன் வளைந்துக் களிப்புடன் ஓடும்.

போராளி ஆரவாரம் போர்க்கொடி தூக்கும்
பேராழி அலையும் பின்வாங்கிச் செல்லும்
பார்வையில் வீரம் பறையாய் ஒலிக்கும்
பார்ப்போரின் கண்களில் பரவசம் கூட்டும்

தளரா முருக்கும் தன்மானச் செருக்கும்
வளமாய் வாழ்விலே வீரம் விதைக்கும்
ஏறுகள் தழுவி ஏற்றம் வளர்க்கும்
வீறுகள் கொண்ட வீர விளையாட்டு.

கொம்புகள் குத்தி குருதிகள் வரினும்
கொடியிடை பூமகள் கடைக்கண் வென்று
கொஞ்சும் விழியும் கோதையின் சிரிப்பும்
நெஞ்சம் அதிலே நிலைத்து நிற்கும்.

சட்டம் காத்து சமூகம் வளர்த்து
திட்டம் தீட்டி திருவிழா நடத்தி
வட்டம் போட்டு வாழ்ந்தக் கூட்டம்
கட்டுக்குள் அடங்குமோ காவல் ஒடுக்கிலே.

கொஞ்சிப் பேசும் கொம்புச் சிங்கங்கள்
வஞ்சகம் அறியா வாடிவாசல் சின்னங்கள்
கலாச்சார அங்கம் கலையாது நிலைத்து
உலாவரும் காளை என்றும் வாழ்கவே.



18. மனதின் ஆற்றல்..!

மனம் என்பது மானிட ஆக்கம்
தினம் நமக்கு திசைகள் காட்டும்
மனதின் ஆழம் ரகசியம் காக்கும்
வனப்புக் கூட்டிட வாழ்க்கைப் புரியும்.

உள்ளத்தின் உள்ளே உருவம் கொள்ளும்
கள்ளம் இன்றி கனிவுகள் கொடுக்கும்
துயர்கள் நடுவில் தூணாய் நிற்கும்
உயர்வுகள் தருவதும் மனதின் ஆற்றலே.

மலைபோல் ஆற்றல் மனதில் வேண்டும்
அலைபோல் உற்சாகம் என்றும் வேண்டும்
தடைகள் உடைக்கும் தைரியம் வேண்டும்
நாளும் உந்துவிசை நம்மில் வேண்டும்.

கோழை மனதை கோலோச்ச வைக்கும்
ஏழை அவனிலும் ஏற்றம் விதைக்கும்
காணும் திசைதனில் கடமை செய்யும்
வேகம் நம்மில் விதைத்துச் செல்லும்.

ஆள்பவர் மனது ஆற்றல் கொண்டால்
மாள்வார் உண்டோ மண்ணில் வீணாய்
ஏழ்மை ஒழித்து ஏக்கம் தீர்க்கும்
ஆளுமை நம்மில் ஆற்றல் கொடுக்கும்.

ஆழ்மனம் உள்ளே ஆக்கம் கொடுக்கும்
கீழ்க்குணம் அனைத்தும் தானாய்க் குறைக்கும்
தாழ்மைப் பண்புகள் தளராது பெருக்கும்
வீழாது நம்மைத் தாங்கிப் பிடிக்கும்.

இறைவன் அளித்த இனிய அற்புதம்
மறைந்து நிற்கும் மனதின் ஆற்றலே
அழிக்கவும் ஆக்கவும் ஆட்டி வைக்கும்
அடங்கிச் சென்று ஆன்மீகம் உரைக்கும்.

அன்பும் அறிவும் தெளிவும் கொண்டு
மனதை ஆளும் வித்தை அடைந்து
மண்ணில் நாமும் உரமுடன் வாழ
நெஞ்சின் ஆற்றல் நித்தம் வேண்டும்.

19. மகிழ்ச்சியும் மனிதவளமும்..!

மனித வளமே மேன்மை தருமே
உழைக்கும் கரமே உலகை ஆளுமே
திட்டம் வகுக்க வளங்கள் பெருகுமே
மகிழ்ச்சி என்பதும் மானுடம் ருசிக்குமே.

சரியான முடிவும் சரியான தெரிவும்
விரிவான முயற்சியும் விழிப்புடன் செயலும்
சிரமங்கள் பாராது சிந்தையில் நிறுத்த
வரமாக வருமே வாழ்வில் மகிழ்ச்சி

திறமைகள் அனைத்தும் திறமுடன் வளர்த்து
அறநெறி வழியில் ஆற்றல் பெருக்கு
உந்துச் சக்திகள் உன்னில் நிறுத்து
சிந்தையில் மகிழ்வு சிறகுகள் விரிக்கும்

ஆக்கம் ஊக்கம் அகிலத்தில் விதை
ஆக்கும் சக்தி அன்றாடம் நினை
உழைப்பவர் நலனை உலகிற்கு உரை
மானுட மகிழ்வே மண்ணில் இறை.

கல்வி அறிவும் உலக அறிவும்
நல்ல பாதைகள் நாளும் காட்டுமே
ஒற்றுமை உணர்வு ஓங்கி இருந்தால்
சற்றும் குறையாது மனித வளமே

சிந்தனை வளம் சிறப்பாய் வளர்த்து
முன்னேற்றப் பாதையில் தளராமல் நடந்து
உழைப்பு என்னும் மேலான வளத்தை
உலகிலே பெருக்கி உயர்வுகள் காண்போம்

முயற்சி ஒன்றை மூலதனம் ஆக்கி
அயராமல் முன்னேற ஆக்கம் கொள்வோம்
வேலைகள் கிடைக்க வாய்ப்புகள் பெருக
இளைய தலைமுறை இன்பமுடன் செழிக்கும்.

துடிப்புடன் முனைந்திட ஆசைகள் கொடுப்போம்
சாதிக்கும் எண்ணங்கள் குறைவின்றி விதைப்போம்
சோம்பல் களைந்து விழித்து எழுவோம்
மனித வளங்கள் மண்ணிலே பெருக்குவோம்.

20. அது அந்தக் காலம்..!

உலக்கைப் பிடித்து ஓங்கி இடித்து
அம்மி அரைத்தது அந்தக் காலம்
அறுசுவை உணவு அம்மாவின் பாசம்
ஆரோக்கியம் தந்தது அந்தக் காலம்.

எண்ணெய் வழியும் தலையுடன் அமர்ந்து
பாட்டி கதைகள் களிப்புடன் கேட்டு
காடு மேடுகள் சுற்றித் திரிந்து
மகிழ்வுடன் வாழ்ந்தது அந்தக் காலம்.

திண்ணை அமைத்து சுற்றம் வளர்த்து
மண்ணின் மாண்பு மனதில் நிறைத்து
விருந்துகள் உண்டு விருந்தோம்பல் கொடுத்து
சொர்க்கம் கண்டது அந்தக் காலம்.

பெற்றவர் பெரியவர் பெரிதென வணங்கி
பெண்கள் கனிவுடன் சுற்றம் தாங்கி
தந்தை தாயின் தாளடி பணிந்து
ஆசிகள் பெற்றது அந்தக் காலம்.

இன்பம் துன்பம் மாறி வந்தும்
இனிமை இன்பம் இரண்டும் கலந்தும்
வானம் அழுதிட விவசாயி சிரிக்க
வயல்கள் செழித்தது அந்தக் காலம்.

சொந்தம் பந்த நெருக்கம் மறந்து
விஞ்ஞான உலகில் விதிகள் புனைந்து
வளர்ச்சி என்றே வாழ்வைத் தொலைத்து
தளர்வுடன் வேண்டுகிறோம் அந்தக் காலம்.

21. அழகு..!!

வீசும் காற்று அழகு
பேசும் மொழிகள் அழகு
வாச மலர்கள் அழகு
பாசப் பிணைப்பும் அழகு

மின்னும் மின்னல் அழகு
பின்னும் கூந்தல் அழகு
ஒளிரும் விண்மீன் அழகு
ஒளிரும் நிலவும் அழகு

கரையில் அலைகள் அழகு
இரவின் பனியும் அழகு
சிதறும் முத்துக்கள் அழகு
உதட்டோரச் சிரிப்பும் அழகு

மயக்கும் இசை அழகு
வியக்கும் ஓசை அழகு
விழிக்கும் விழிகள் அழகு
செழிக்கும் தோட்டம் அழகு

நல்ல மனையாள் அழகு
இல்லம் பேணுதல் அழகு
துள்ளும் உணர்வுகள் அழகு
அள்ளி அணைப்பதும் அழகு

தாய்மை என்றும் அழகு
சேய்தனைக் காப்பது அழகு
வாழ்த்தில் நனைவது அழகு
வாழ்ந்துப் பார்ப்பதும் அழகு

மழலைப் பேச்சு அழகு
பழகும் உயிர்கள் அழகு
பிஞ்சுக் கரங்கள் அழகு
கொஞ்சி மகிழ்வதும் அழகு

ஏக்கப் பார்வை அழகு
ஊக்கம் தருதல் அழகு
பூக்கும் பூக்கள் அழகு
மீட்டும் வீணையும் அழகு

- முனைவர் தாழை.இரா.உதயநேசன்

உள்ளம் சிரிப்பது அழகு
உவகைக் கொள்வது அழகு
உறவும் பாசமும் அழகு
உலகம் முழுதும் அழகு



22. அன்பினால் அகிலத்தை வெல்வோம்..!

அன்பின் வழியது அன்னை உருவே
இன்பங்கள் ஆயிரம் அளிக்கும் இனிதே
தன்னிகர் இல்லா தனித்துவம் கொண்டதே
உயிர்கள் அனைத்திற்கும் அவசியம் அன்பே.

அன்பிற்கு மாற்று அகிலத்தில் உண்டோ
துன்பத்தைப் போக்கும் அறநெறி அன்றோ
துயரம் நீக்கும் துணையாளன் தானே
அன்பால் உலகை ஆள்வோம் நாமே.

விழிநீர்த் துடைத்து விதிகள் மாற்றும்
அழியா சொந்தம் அகத்தில் ஏற்கும்
விளிம்புகள் இல்லா விந்தைகள் செய்யும்
அன்பால் அகிலம் வெல்வோம் நாமே.

காயம் ஆற்றி களிப்பினைப் பெருக்கும்
மாயம் இல்லா மகத்துவம் அளிக்கும்
வாய்மை ஒன்றை வாழ்வில் நிறுத்தும்
அன்பால் உலகை வெல்வோம் நாமே.

பசிதனைப் போக்கிப் பரிவு காட்டும்
வறுமை நீக்க வேகம் கூட்டும்
தன்னல எண்ணம் தவிர்க்கச் செய்யும்
அன்பால் உலகை ஆள்வோம் நாமே.

தானம் தர்மம் தரணியில் வளர்க்கும்
தேன்போல் சொற்கள் தினமே உதிக்கும்
மான்போல் எழும்பிட மந்திர சொல்லும்
அன்பால் உலகை ஆள்வோம் நாமே.

சேவைகள் செய்ய நித்தம் தூண்டும்
தேவைகள் அறிந்து உதவிட நினைக்கும்
பாவைபோல் நின்று பாசாங்கு காட்டும்
அன்பால் அகிலம் வெல்வோம் நாமே

கரும்பாய் இனிக்கும் கடிந்து கொள்ளும்
இரும்பு மனதும் இளகிட வைக்கும்
நலம்பெற வேண்டி நாளும் வாழ்த்தும்
அன்பால் உலக வெல்வோம் நாமே.

23. எண்ணமே ஏற்றம் தரும்..!

உயர்ந்த எண்ணம் உள்ளத்தில் வேண்டும்
உயரும் நினைவு உயிராக வேண்டும்
துயரம் வரினும் துணிவு வேண்டும்
வியர்வைத் துளியில் ஏற்றம் வேண்டும்.

உழைக்கும் கரங்கள் ஓங்க வேண்டும்
அணைத்து அன்பைப் பகிர்தல் வேண்டும்
உயிர்கள் அனைத்தும் மகிழ வேண்டும்
அயற்சிகள் இல்லா ஏற்றம் வேண்டும்.

முயற்சி நாளும் பெருக்கிட வேண்டும்
வியப்புடன் வெற்றிகள் குவிந்திட வேண்டும்
விண்ணும் நம்மை வியக்க வேண்டும்
மண்ணில் ஏற்றம் மலையென வேண்டும்.

கசிந்து உருகும் உள்ளம் வேண்டும்
இசைந்து செல்லும் இதயம் வேண்டும்
கறந்த பால்போல் தூய்மை வேண்டும்
சிறப்பான எண்ணம் துளிர்விட வேண்டும்.

இம்மையில் மனிதம் வளர்க்க வேண்டும்
தன்னல மில்லா தயவு வேண்டும்
பொன்னும் பொருளும் பகிர்தல் வேண்டும்
இத்தரை வாழ்வில் ஏற்றம் தோன்றும்.

இலக்குகள் என்றும் உயர்வாய் வேண்டும்
உலகோர் உன்னை வாழ்த்த வேண்டும்
சிகரம் தொட்டிடும் சிந்தை வேண்டும்
உகந்த எண்ணம் செழிக்க வேண்டும்.

ஏமாற்றும் எண்ணம் எறிந்திட வேண்டும்
இறுமாப்பு என்றும் அகற்றிட வேண்டும்
தியாக உணர்வும் திறமை மிகுதியும்
வியாபித்து நிற்க ஏற்றம் பிறக்கும்.

அறநெறி காத்து அறிவை வளர்த்து
அன்பெனும் அடித்தளம் ஆழமாய்ப் பதித்து
குறைகள் மறந்து நிறைகள் பேசி
வாழ்வில் வசந்தம் வீசச் செய்குவோம்.

அடுத்தவர் வாழ்வைக் கெடுப்பதை நிறுத்தி
தடுமாறும் எண்ணங்கள் அடியோடு விலக்கி
அமைதி வழியில் அகிலம் நிலைக்க
இம்மையில் வாழ்வு ஏற்றம் கொள்ளுமே.



24. சித்திரைப் பெண்ணே வருகவே..!

செம்மஞ்சள் பூசி செந்தூரம் கமழ
எம்முள் சிலிர்த்தே எழும்பும் பெண்ணே
சிங்காரம் மிகுந்தச் சிரிப்பில் பிறக்கும்
செங்காந்தள் மலராம் சித்திரைப் பெண்ணே

ஆதவன் அனலாய் ஆட்கொண்டு நின்று
சேதம் செய்ய சூழும் வேளை
வேகம் பறந்து வேல்விழி நீயும்
தேகம் குளிரத் தென்றலாய் வீசு

முக்கனிச் சுவையில் முதற்கனி மாவும்
கொக்கு நிறமாம் கொத்து மல்லிகையும்
கொன்றை மலரும் கொடிதனில் பூக்க
மின்னும் பொலிவுடன் மலர்ந்திடு பெண்ணே.

சித்திரை நிலவே சிவந்த ஒளியே
நித்திரை சுகமாய் நிதமும் அளித்து
அற்புத வளமும் அழியாச் செல்வமும்
முற்றும் அருள்வாய் சித்திரைப் பெண்ணே.

அருளும் அன்பும் அளவின்றித் தருவாய்
திருவாய் மலர்ந்துத் துன்பம் தீர்ப்பாய்
அல்லவை அகற்றி நல்லவை பொழிவாய்
இல்லாமைப் போக்கிக் கல்லாமை அகற்றுவாய்.

வறுமை ஒழித்து வன்மம் அழிக்க
மறுபடி மண்ணில் மங்களம் கொழிக்க
இல்லறம் எல்லாம் இனிதாய் அமைய
செல்லக்கிளி போலே சித்திரையே வருவாய்.

வறுமை வன்மம் வன்முறை ஒழிப்பாய்
சுற்றும் பூமியில் சுடராய் நிறைவாய்
கற்கும் யாவரும் களிப்புறச் செய்வாய்
முற்றும் பகைமை முழுதாய்ப் போக்குவாய்.

சிந்தனை முழுதும் சீர்மை பரவட்டும்
வந்தனம் செய்கிறோம் வாழ்வு சிறக்கட்டும்
சரித்திரம் சொல்லும் சாதனை உதிக்கட்டும்
விசித்திரம் செய்யவே சித்திரைப் பிறக்கட்டும்.

25. தாய்நாடு..!

தாயாகத் தாங்கினாய் தாய்நாடு ஆனாய்
ஓயாமல் உள்ளத்தில் ஒளியாக நிறைந்தாய்
தாய்மண்ணும் தாய்மொழியும் தானாக இங்கே
ஒன்றாக அமைந்தது உலகில் புதுமையே

உயிர்கள் வாழ வழிகள் தந்து
உயர்ந்து நிற்கும் உன்னத நாடு
பசுமையும் செழிப்பும் பரந்து விரிந்து
பசுபோல் பாசம் பொழிந்திடும் நாடு

கலைகள் ஓவியம் கண்ட நாடு
சிலைகள் நிறைந்த செந்தமிழ் நாடு
இயலும் இசையும் இன்பமாய் தந்து
நயமுடன் திகழும் நற்றமிழ் நாடு

வீரம் மிகுந்த வீதிகள் உண்டு
தீரம் நிறைந்த தலைவர்கள் உண்டு
மேதைகள் பலரும் மேன்மை அடைய
பாதைகள் வகுத்தப் பைந்தமிழ் நாடு

சங்கம் வைத்து சங்கத்தமிழ் வளர்த்து
மங்காத தமிழுக்கு மாலைகள் சூடி
ஐம்பெருங் காப்பியம் ஐம்பெரும் திணைகளில்
வளமுடன் வாழ வழிசொன்ன நாடு

யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்றே முழங்கிய சமத்துவ நாடு
வந்தாரை எல்லாம் வளமுடன் வாழ்த்தி
விருந்தோம்பல் முறைகள் விதைத்த நாடு

இயற்கை வரைந்த இனிய நாடு
செயற்கை மோகத்தில் சிக்கியதும் ஏனோ
காடுகள் வளங்கள் காணாமல் போக
வாடும் மனிதரின் வேதனை அதிகமே.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு அனைத்தும்
தடம்மாறி இன்று தடுமாறிப் போனது
சமத்துவம் மிகுந்த சமுதாயம் எல்லாம்
சமாதி ஆனது சாபம் தானோ

உற்றார் உறவுகள் உயிராய் மதிக்கும்
சுற்றம் நட்பும் சிறப்புடன் நிலைத்து
வனப்பு மிகுந்த வளநாடு எமக்கு
மீண்டும் வேண்டும் புதிதாய் இன்றே.



26. துணிந்து நில்..!

வெறுப்பு விரக்தி மனதில் கொள்ளாதே
இன்னும் காலம் – இருக்கிறது கலங்காதே
எதிர்நீச்சல் போட்டு எழுந்து நின்று
மதியால் விதியை வெல்லலாம் வா.

கவலைகள் உலகில் சிறையாகிப் போகாது
சவால்கள் ஏற்கும் துணிவு கொள்வாய்
சிந்தனை தெளிந்து இலக்குகள் நேராக்கி
சிகரம் அதையே சீக்கிரம் தொடுவாய்.

சோம்பல் விலக்கி அலட்சியம் தவிர்த்து
உழைப்பு ஒன்றை அனுதினம் பெருக்கு
துன்பங்கள் அனைத்தும் துவளாது ஒதுக்கி
மின்னலாய் மின்னி மாலைகள் சூடு.

பெண் என்று இழிவாய்ப் பேசினால்
விண்ணை முட்டும் விருட்சமாய் வளர்ந்திடு
சாதிக்கும் வழியில் தடைகள் வந்தால்
நிமிர்ந்து நின்று சாதனைப் படைத்திடு

சாதிகள் பெயரில் ஒதுக்கி வைத்தால்
வீதிகள் தோறும் வெகுண்டு எழும்பிடு
பேதங்கள் கண்டு பயந்து விடாது
வேங்கை போலே வீரம் கொள்வாய்.

நீதிகள் மறந்து அநீதிகள் இழைத்து
வீழ்த்திட நினைப்பவர் கண்முன்னே நிமிர்ந்து
பொறுத்தது போதும் என்றே முழங்கி
பொங்கி எழுவாய் – போர்க்குணம் கொண்டே.

வறுமை கண்டு வெறுமை கொள்ளாது
உறுதியாய் நீயும் உரிமைகள் நாடு
ஏழ்மை நிலைதனை ஏசுவோர் கண்டால்
எதிர்த்து நிற்கும் துணிவு ஏற்பாய்.

விழுந்தால் அருவி – எழுந்தால் இமயம்
என்பதை நீயும் மனதிலே நிறுத்து
தோல்வி யாவும் வெற்றிப் படியாக்கி
துணிந்தே செல் உலகம் உன்கையில்.

27. புதுமைப் பெண்..!

பாரதி கண்ட புதுமைப் பெண்கள்
வீரம் வல்லமை வளமாய்க் கொண்டார்
தாய்மைப் போற்றும் தாயகப் பெண்கள்
பாய்ந்து சீறும் பாதைகள் கண்டார்.

பொறுமைக் கொண்டு பொறுப்புகள் சுமந்து
வறுமை நடுவிலும் வேதனை சகித்து
விண்ணை ஆளும் விந்தை அறிந்த
மாந்தர் தானே மண்ணின் பெருமை.

அடுப்பின் அடியில் அடங்கிக் கிடந்து
துடுப்புகள் இன்றித் துடிக்கும் யாவரும்
நிலவின் ஒளிக்கு நிகராய் நின்று
வலம் வந்தால் வானம் வசப்படும்

வன்மம் கொண்டு வன்முறை செய்து
உன்னை வீழ்த்தும் யாவரும் எதிர்த்து
மனக்குறை அனைத்தும் மறந்து நீயும்
சினம் கொண்டு சீறி எழுந்திடு

உரிமைகள் எல்லாம் உனக்கென இருக்க
சரிவுகள் அனைத்தும் சீராக்கி இன்று
கல்வி மருத்துவம் கலைகள் அனைத்திலும்
தடம் பதிப்பாய் தங்கப் பெண்ணே.

மடமை நிறைந்த மங்கை நீயும்
கடமை உணர்ந்து கலிகாலம் எதிர்த்து
சரித்திரம் படைத்திட சபதம் கொண்டு
ஏரிவாய் நீயும் எரிதழல் போலே

ஆணும் பெண்ணும் நிகரென எண்ணி
பேணுவாய் நீயும் பெண்ணின் குணங்கள்
வாக்கிலும் பேச்சிலும் வாய்மைக் கொண்டு
போக்குவாய் அநீதி புதுமைப் பெண்ணே.

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
புவியினில் யாருக்கும் அஞ்சாத நெறியும்
கண்ணுக்குள் வைத்துக் கருத்தாய் காத்து
புதுமைப் பெண்ணாய் புறப்படு இன்றே.

28. மணம் வீசிடும் மனதின் நினைவுகள்..!!

வண்ண மலராம் சிந்தனைப் பூக்கள்
மலரும் பொழுதில் உதிரும் இதழ்கள்
இரவில் உதிக்கும் விண்மீன் அகல்கள்
வித்தாரக் கள்ளியே அந்த நினைவுகள்.

முட்களாய் மனத்தைக் குத்திக் கிழிக்கும்
தனிமையில் நிற்க சித்தாந்தம் பேசும்
வேதனைப் பெருக்கை விலையின்றிக் கொடுக்கும்
இதயத்தில் நினைவுகள் வீணை மீட்டும்.

ஓடையில் நீந்தும் மாய மீன்கள்
கூடையில் நின்று ஆடும் பொம்மைகள்
உருவம் இல்லா உன்னத ஓசைகள்
பருவ வயதின் பால்மன பிம்பங்கள்.

மறைந்து நின்று சுடும் வடுக்கள்.
நெஞ்சை அழுத்தும் நீங்கா பாரங்கள்
கனவு உலகில் நீந்தும் குமிழிகள்
மனதை வருடும் தொடர் ரணங்கள்.

உணர்வைக் கலைக்கும் கற்பனைப் பறவைகள்
உணவு தேடாத உள்மன அலைகள்
மாய வீதியில் பறக்கும் சிறகுகள்
தேயாது இணைந்து நடக்கும் நினைவுகள்.

கண்கள் வழியே காட்சிகள் பிடிக்கும்
எண்ணம் மிகுதியில் வெகுவாய்ச் சிரிக்கும்
குவிந்துக் கிடைக்கும் ரகசியம் காக்கும்
கவிதை அனைத்திலும் கருவாகும் நினைவுகள்.

நிம்மதி இழந்தும் நிரந்தரம் ஆகும்
சம்மதம் இன்றியே சத்தம் எழுப்பும்
இம்மையில் என்றும் அசைபோட்டு சுவைக்கும்
எம்மனம் நீங்கும் நினைவுகள் போரில்?

வீசும் காற்றும் எழுப்பிடும் நினைவுகள்
பேசும் மொழியும் சொல்லிடும் நினைவுகள்
ஏக்கப் பொழுதும் ஏந்திடும் நினைவுகள்
ஊக்கம் கொடுப்பதும் உள்ளது நினைவுகள்.

29. மனிதத்தை முத்தமிட்டால்..!

தன்மைகள் மறந்து தன்னை இழந்து
தன்னலம் ஒன்றில் தனக்காய் வாழ்ந்து
தன்வசம் இருந்த மாண்புகள் புதைத்து
தன்னிலை மறந்த மனிதன் இங்கே.

மரத்துப் போன மனங்கள் உள்ளே
மரித்துப் போனது மனிதம் தானே
கண்கள் மறைத்து கண்டும் காணாது
வினோத வாழ்வை விரும்பியதும் ஏனோ

கொடூரச் செயல்கள் கொடுமைகள் நடந்தும்
தடுத்திட எவரும் முனைவ தில்லையே
உச்சிக் கொட்டி வெட்டியாய் பேசி
உதறினார் மனிதம் உள்ளத்தில் இருந்தே.

பசித்தவன் புசிக்க உதவிடல் வேண்டும்
இல்லாமைப் போக்க கொடுத்திடல் வேண்டும்
பல்லுயிர்க் காக்கும் பரிவு வேண்டும்
இல்லாமைப் போக்க இதயம் வேண்டும்.

கனிவுப் பார்வை இதமான வார்த்தை
இனிமைப் பொங்க உலகில் அளிப்போம்
மனிதம் கொண்ட உண்மை உருவங்கள்
மண்ணில் மீண்டும் மறுபிறவி காணட்டும்.

மனிதம் என்னும் விதைகள் விதைப்போம்
சுயநல வேரினை சுத்தமாய் அறுப்போம்
காலம் அறிந்து உதவிகள் செய்வோம்
மனித நேயமே உயிரெனக் கொள்வோம்.

எங்கு இருப்பினும் எவ்வுயிரும் ஒன்றே
அவ்வுயிரை உயிராய் மதித்திடல் நன்றே
சாதி சமய சாயம் கலைத்து
நீதி வழுவா மனிதம் வளர்ப்போம்.

அண்ணன் தம்பி உறவாய்க் கூடி
நட்பும் பாசமும் நலமாய் வளர்த்து
பிரிவுகள் என்பதைப் பிரித்து வைத்து
பிணைப்புடன் வாழ்ந்து நேயம் வளர்ப்போம்.

தோழமைக் கொடுத்து குறைகள் அகற்றி
அன்பைக் கலந்து வார்த்தைகள் கொடுத்து
மகிழ்ச்சியின் அடித்தளம் மனிதம் என்றே
புதுயுகம் படைத்து புத்தொளி பெறுவோம்.



30. மானுடம் வெல்லும்..!

பாசம் அறியா பிஞ்சுகள் பிறக்குது
பெற்றப் பிள்ளையின் பாசம் மறையுது
முதியோர் அநாதை இல்லங்கள் பெருகுது
மண்ணில் மானுடம் மரித்துப் போகுது.

வறுமை ஏழ்மையில் வாழ்பவர் உண்டு
பசியும் பட்டினியும் பழகினார் என்றும்
வீழ்ந்துக் கிடப்பது யாரென்றாலும் – அவர்
மனிதர் என்பதை மறவாமை நன்று.

களவுகள் கபடங்கள் களைப்பின்றி செய்து
கற்பு பறிக்கும் கயவர்கள் கூட்டம்
அடித்துப் பிடுங்கி ஒடுக்கி வாழும்
சுயநல மானுடம் கருகிட வேண்டும்.

விஞ்ஞான மோகம் விரைந்து வளர
மெய் ஞானம் முழுதாய் மறந்தோம்
ஆசையும் தேவையும் நாளும் கூடவே
வாழ்வின் அடையாளம் – மானுடம் புதைத்தோம்

ஆன்மா என்னும் அறைகளின் நடுவே
மேன்மை குணமும் மென்மை பண்பும்
ஈரம் இரக்கம் இதயத்தில் வளர்த்து
புவிதனில் மானுடம் பெரிதாய் வளர்ப்போம்.

முப்பால் தந்த வள்ளுவன் வழியும்
அன்னை தெரசாவின் அன்பு நெறியும்
இம்சைகள் இல்லா அகிம்சை முறையும்
இத்தரை மீதிலே இனிதாய் விதைப்போம்

உலகத்தில் பிறவி ஒருமுறை கொண்டோம்
மனதில் நிறுத்தி மாண்புகள் மீட்போம்
விருப்பு வெறுப்புகள் தீயிட்டு எரிப்போம்
மானுடம் ஒன்றை உயிராய்ப் போற்றுவோம்.

31. வாசிப்பும் நேசிப்பும்..!

புத்தகம் என்றும் புதுமைகள் தருமே
புதுப்புது கருத்துகள் போதிக்கும் தினமே
உள்ளத்தைப் புதுப்பிக்க உற்சாகம் வருமே
இம்மையில் நாமே வாசிப்பை நேசிப்போம்.

தாய்மொழி நூல்கள் தாயெனக் கருதி
கண்களின் வழியே கருத்துகள் ஈர்ப்போம்
குறிக்கோள் தொடவும் விளக்கென ஒளிரவும்
வாசிப்பைப் பெருக்குவோம் வளம் பெறுவோம்.

அறிவுப் பசிதனை அனுதினம் தூண்டுவோம்
தேடல் ஏக்கம் தெளிவுடன் தொடர்வோம்
வளரும் தலைமுறை சரித்திரம் காப்போம்
முன்னேறிச் செல்ல வாசிக்க வைப்போம்.

மனதின் வெளிச்சம் வாசிப்பு என்போம்
அறிவின் வெளிச்சம் நூல்கள் என்போம்
புத்தகம் சுமக்க பெலன் கொள்வோம்
புத்துயிர் கிடைக்க வாசிப்பைக் கூட்டுவோம்.


ஆர்வம் கொண்டே புத்தகம் வாசி
அடிமை எண்ணம் அகற்ற யோசி
அறமும் நெறியும் வாழ்விற்குப் பூசி
எண்ணங்கள் உயர்வாகும் எழுத்துகள் நேசி.

படிக்கும் நேரம் பறப்பாய் நீ
துடிப்பில் சிறகு விரிப்பாய் நீ
கற்பனை வளத்தில் கவிஞன் நீ
காதல் கொண்டு படித்திடு நீ.

கையடக்க நூலும் கற்கப் பழகு
மெய்ப்பொருள் அனைத்தும் என்றும் உனது
அறிவெனும் ஒளியில் சுடர்விடும் மனது
குறைவில்லா நல்வாழ்வு பெற்றிடு நன்று.

அலைபேசி கணினி வலைதள மோகம்
வாசிப்பை அடியோடு நீக்கும் அன்றோ
கரங்களில் நூல்கள் ஏந்தி நின்று
வாசிப்பை உலகில் எங்கும் விதைப்போம்.

புலனறி வழக்கம் புவிதனில் கொள்வோம்
நல்ல நூல்கள் மூச்சென சுவாசிப்போம்
ஞானம் அறிவு ஞாலத்தில் வளர
நல்ல நூற்கள் நாளும் பிறக்கட்டும்.



32. வாழ்க்கையின் ஏணிப்படிகள்..!!

கருவில் உதித்த காலம் முதலாய்
உருக்கம் கொண்டு நெஞ்சில் அணைத்து
பிறந்து தவழ்ந்து நடக்கும் பொழுதிலும்
வாழ்வின் ஏணி முதன்முதற் தாயே.

பிஞ்சுக் கரம்பற்றி கொஞ்சி விளையாடி
நெஞ்சம் அதிலே காலமும் சுமந்து
நல்லவை தீயவை நாளும் சொல்லி
தோளில் சுமக்கும் தந்தை ஏணியே.

மழலைப் பேச்சில் மயங்கிச் சிரித்து
அழகாய் அகரம் முதலில் கற்பித்து
பள்ளிக்கு அனுப்பி படியோரம் காத்திருந்து
தம்பிள்ளை அறிவாளி என்பவரும் ஏணியே.

அன்னைத் தமிழை அழகாய்ப் பாடி
அறியாமை அகற்றி அறிவெனும் விளக்கேற்றி
வாழ்வின் இருளைக் கல்வியால் அகற்றி
ஆனந்தம் கொள்ளும் ஆசானும் ஏணியே.

நல்லது கெட்டது இரண்டிலும் இணைந்து
தன்னுயிர் போல நம்மையும் நேசித்து
நன்மையின் வரமாகத் தோள்கொடுத்து தாங்கும்
நண்பன் அவனும் – வாழ்வின் ஏணியே.

துன்பம் போக்கி துயரம் நீக்கி
துணிவுடன் நடந்திட அறிவுரை சொல்லி
துணையாக நிற்கும் சொந்த உறவுகள்
ஏணியாய் அமைவதும் – வாழ்வின் வரமே

ஈருடல் ஒருயிர் என்றே வாழ்ந்து
வாழ்வில் வசந்தம் அனைத்தும் அளித்து
கைகோர்த்து நடக்கும் வாழ்க்கைத் துணையும்
ஏற்றம் தந்திடும் ஏணிப்படி தானே

எல்லா நிலையிலும் அருகினில் இருந்து
எல்லா தயவும் ஆசியும் தந்து
எல்லா வழிகளும் நமக்காய்த் திறக்கும்
தெய்வத்தின் கரங்களும் – ஏணிப்படி தானே

நற்குணம் கொண்டு நல்லது செய்து
அன்பும் பண்பும் பாசமும் தந்து
நற்புகழ் நற்பெயர் அடைந்திட வாழ்த்தும்
அத்தனை உயிரும் வாழ்வின் ஏணியே.



33. விவசாயம் நின்றுவிட்டால்..!

உயிர்கள் வாழ உணவுக் கொடுக்கும்
பயிர்கள் எல்லாம் பெரிதான வரமன்றோ
அகிலம் இயங்கிட அச்சாணி அதுவே
விவசாயம் இங்கே உயிர்மூச்சு ஆகணுமே

வானம் பார்த்து ஏர்ப்பூட்டி உழுது
விதைகள் வகையாய்ப் பிரித்து எடுத்து
பருவம் பார்த்து பக்குவமாய் விதைத்து
கருவாய் சுமக்கும் உழவும் பெருகட்டும்.

சேற்றில் இறங்கி களைகள் பிடுங்கி
விளையும் பயிர்கள் வீட்டில் சேர்த்து
ஊரார் பசிப்போக்கி உள்ளம் மகிழ்ந்த
உன்னதத் தொழில் - விவசாயம் பெருகட்டும்.

முப்மாரிப் பொய்க்க காவேரி கைவிட
நம்மூரில் விவசாயம் நாசமாய்ப் போனது
வயல்கள் எல்லாம் வெடித்து வறண்டு
விவசாயி உயிரை உரமாய்க் கேட்குது

நெல்லும் நீரும் நிலத்தினில் பெருக
நெற்களம் கண்ட காவிரிப் பெருமகள்
கரைகள் புரண்டு கடந்து வந்து
உழைக்கும் வர்க்கம் உயிர்பெறச் செய்யட்டும்.

விளைவிக்கப் பல்வேறு வித்தைகள் செய்தும்
விலையை மட்டும் விதிக்க வழியின்றி
வியர்வைச் சிந்தும் விவசாயி வாழ்வில்
சதிசெய்யும் விதிகள் விலகிச் செல்லட்டும்.

மரங்கள் அழித்து காடுகள் ஒழித்து
வீடுகள் கட்டி வியந்த மனிதா
அச்சம் இன்றி அனுதினம் நீயும்
பச்சை வயல்கள் பலிகொடுப்ப தென்ன?

பணமும் பதவியும் உயிர்வாழச் செய்யுமா
துரித உணவுகள் ஆரோக்கியம் கொடுக்குமா
விவசாயம் நின்றால் – விளைச்சல் செழிக்குமா
வீதிகள் இருக்குமா –விதிகள் மாறுமா?

நெல்லும் நீரும் வயலும் வரப்பும்
வாழ்வின் அங்கமென அகத்தில் வைப்பாய்
உயிரும் உணர்வும் உழவை அணைத்து
விவசாயி போற்றுவோம் விவசாயம் காப்போம்.



34. விழித்திருப்போம் விடியலுக்காக..!

இரவினைக் கிழித்து இனிதாய் உதித்து
சிரம் உயர்த்தி சிறகுகள் விரித்து
ஒளியினைத் தந்து வழிதனைக் காட்டும்
விடியல் இங்கே அனைவருக்கும் சொந்தமே

வெள்ளி மறைந்து வெளிச்சம் பிறந்தும்
தெள்ளத் தெளிவாய் தீபம் இருந்தும்
ஒளியேதும் புகாத ஒற்றை அறையாய்
இருண்டுக் கிடக்குதே இகத்தினில் வாழ்வு

வறுமைப் பிடியில் சிக்கித் தவிக்க
வேலை வாய்ப்பு கரங்கள் விரிக்க
வன்முறை ஒன்று வெகுவாய் வளருதே
விழித்தெழு மனிதா விடியல் உனதே.

பிஞ்சுக் கரங்கள் உழைத்து நிற்கும்
கோர நிலைமை மனதை வருத்தும்
ஓலைக் குடிசையின் பட்டினி ஓலம்
கூக்குரல் இடுதே விழித்தெழு மனிதா.

வெளிறிய வாழ்வு வெளிச்சம் அடைய
எஞ்சிய வாழ்வில் ஏற்றம் பெருக
வெற்றிக் களிப்பில் வாழ்வு மிளிர
விடியல் பிறக்கும் விழித்தெழு மனிதா.

உறக்கம் தவிர்த்து உற்சாகம் கொள்வாய்
தயக்கம் அனைத்தும் தகர்த்து எழுவாய்
உழைப்பைப் பெருக்கி உயர்ந்திட முனைவாய்
விடியல் உதிக்கும் விழித்தெழு மனிதா.

புதியதோர் உலகு நமக்காய் காத்திருக்க
நிமிர்ந்து எழுவாய் தடைகளை உடைப்பாய்
தலையெழுத்து என்று தயங்கி நில்லாமல்
நம்பிக்கைக் கொள்ளவே விழித்தெழு மனிதா.

சிறிய துயரில் சிதையாமல் நின்று
முயற்சிகள் கொண்டு முயன்றுச் செல்
வெற்றிகள் என்றும் உன்னிடம் குவியும்
விழித்தெழு மனிதா விடியல் உனதே.

இன்னல் அனைத்தும் உடைத்திடப் பழகு
இடைஞ்சல் எல்லாம் உதறிடப் பழகு
தைரியம் ஒன்றே விடுதலை விளக்கு
விரைவாய் விடிந்திடும் ஒருநாள் கிழக்கு.

விடியாத இரவென்று ஒன்றும் இல்லை
முடியாத செயலென்று எதுவும் இல்லை
ஆறாதக் காயங்கள் புவிதனில் இல்லை
விடியல் பிறந்திடும் விழித்தெழு மனிதா.

35. நான் எங்கே போவது?

உன்னில் புதைந்து உருவம் கொண்டேன்
என்னில் உன்னை சிலையாய் வடித்தேன்
பன்னீர் நதியில் படகு வடிவில்
தன்னிலை மறந்தேன் தஞ்சம் அடைந்தேன்.

வார்த்தைகள் எடுத்து வடிவம் கண்டேன்
பார்க்கும் பொழுதில் பரவசம் ஆனேன்
ஏற்றத் தோழன் என்றே நினைத்தேன்
மாற்றம் கொடுத்து மாறியதும் ஏன்?

தாலாட்டுக் கேட்டு தூங்க நினைத்தேன்
பாலாட்டுக் குட்டியாய் பரிவுடன் நின்றேன்
வீணான வார்த்தையில் வீழ்ந்து விட்டேன்
ஏனோ உந்தன் மௌனத்தில் தவித்தேன்.

ஆறுதல் தருபவள் அமைதியில் செல்ல
ஆழ்மனம் கொண்டது வழியும் மெல்ல
பால்மனம் ஏக்கத்தை யாரிடம் சொல்ல
பேரில் வழியுண்டோ ஏக்கம் வெல்ல?

கொஞ்சும் குரலில் கெஞ்சிப் பார்த்தேன்
வஞ்சி அவளில் வசியம் கண்டேன்
மிஞ்சும் அழகில் என்னைத் தொலைத்தேன்
சஞ்சலம் தந்து சிரிப்பதும் ஏனோ?

பௌர்ணமி நிலவில் பகிர்ந்த நினைவுகள்
சொர்க்கமாய்க் கிடைத்த நிரந்தர உணர்வுகள்
தர்க்கம் செய்து தட்டிச் சென்றாய்
நிர்கதி ஆனவன் எங்கே போவது?

கூண்டுக்குள் அடைந்த கிளியாக நீயிருக்க
மீண்டு வரவே நீயும் தயங்க
தோன்றும் வானவில் உன்முகம் காட்ட
வேண்டும் நீயென என்மனம் சொல்லுதே.

கோபப் பார்வையில் குளிர்காய வைத்தாய்
மேகம் போலே வேகம் சென்றாய்
சோகம் ஒன்றை நெஞ்சில் விதைத்தாய்
பெண்ணே நானும் எங்கே போவது?

புரிந்துகொள் பெண்ணே தவிக்கும் மனதை
தெரிந்துகொள் நானும் அன்றில் பறவை
உரித்திடு உந்தன் மாயச் சிறகை
சரியென சொல்லிடு என்னுயிர்க் கனவை.



நூலாசிரியரின் நூல்கள்:

தமிழே விதையாய் – கவிதைத் தொகுப்பு

செவத்த இலை – சிறுகதைத் தொகுப்பு

மர்மங்களின் மறுபக்கம் – சிறுகதைத் தொகுப்பு

கலைக்கப்பட்ட கனவுகள் – சிறுகதைத் தொகுப்பு

தொடுவானம் – சிறுகதைத் தொகுப்பு

பூவோடு பேசும் பூஞ்சிட்டு – கவிதைத் தொகுப்பு

மலரே மௌனமா – கவிதைத் தொகுப்பு

சுகமான சுமைகள் – சிறுகதைத் தொகுப்பு

விடை தேடும் விடியல் – கவிதைத் தொகுப்பு

எண்ணமே ஏற்றம் தரும் – கவிதைத் தொகுப்பு

எரிதழல் கொண்டு வா – கவிதைத் தொகுப்பு

ஆங்கில நூல்கள்(பதிப்பில்):

"Sparrow whispers to floret" -

"Why does the flower maintain silence"

"Tamil is my root "

"The other side of Enigma"

"Delightful Burdens"

"Horizon"

" Discovering Response from Dawn"

" Faded dreams"

" Bloody leaf"



வெளியீடு / புத்தகம் கிடைக்குமிடம்

கலை உதயம் பதிப்பகம்

எண்:10, முதல் தெரு, ஸ்ரீராமபுரம்,

ஆம்பூர்–635802.

திருப்பத்தூர் மாவட்டம்.தமிழ்நாடு

தொடர்புக்கு: 95978 64183

E.Mail : kalaiudhayampublisher@gmail.com